Annual Subscription Rs. 60/-
Price Rs. 5/-

# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்


மலர் - 19 இதழ் - 11 நவம்பர்- 2006



இயேசு ஆண்டவர் சிலுவையில் அறையப்பட்ட
கொல்கொதா மலையின் இன்றைய தோற்றம் (கபாலஸ்தலம்)
(செப்டம்பர், 23 - 2006ல் எடுக்கப்பட்டது)

# BIBLE MEDITATION

**TV PROGRAM**




## ஆசானின் அறிவுரையில் ...

1. ஆசிரியர் உரை .................. 1
2. கிறிஸ்துவின் வாழ்க்கை .................. 9
3. பெண்கள் பகுதி .................. 14
4. வாலிபர் பகுதி .................. 16
5. சிறுவர் பகுதி .................. 19
6. விசுவாசத்தின் அடிப்படைகள் .................. 21
7. தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள் .................. 26
8. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய் இருக்கிறார் .................. 30

# THIRUMARAI AASAAN

S. Rajanayagam
Editor

J.C. Choate
Honorary Editor

86-A, Dharapuram Road, Kangayam - 638 701. Tamilnadu. India.

Pleading for the restoration of pure New Testament Christianity

Vol. 19 NOVEMBER - 2006 Issue - 11


ஆசிரியர் உரை

## "என்னிடத்தில் திரும்பு"

மிக சமீபத்தில், பிரபலமான பிரசங்கி ஒருவர் பூரண வயதில் அயல்நாட்டில் மரித்துப்போனார். இவர் ஒரு பழுத்த பக்திமான். வேதாகமத்தின் காரியங்களில் தேறியவர். பழைய, புதிய ஏற்பாட்டுச் சம்பவங்கள் இவருக்கு அத்துப்படி. எளிய நடைப் பேச்சாளர். சிறந்த எழுத்தாளர். வேதாகமத்தின் கருத்துக்களை லாவகமாகக் கையாள்பவர். தன் வாழ்நாளில் அநேகருக்கு வேத வசனங்களைப் போதித்துப் பல வேத விற்பன்னர்களை உருவாக்கியவர். அதைவிட முக்கியமாக, இரட்சிப்பின் திட்டத்தின் அழகை பாங்குற எடுத்துக்காட்டி, அநேக ஆத்துமாக்களை கொள்ளைப் பொருளாகக் கொண்டவர். இவரிடம், இவர் கர்த்தரால் எடுத்துக் கொள்ளப்படுவதற்குச் சில நாட்கள் முன்பாக, உங்களுக்குப் பிடித்தமான பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசி யார் என்று கேட்ட போது, **எரேமியா, எரேமியா** என்று பளிச்சென பதில் சொல்லியுள்ளார். இதை நான் இங்கு குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த தேவ மனிதனை உயர்த்தி பேசுவதற்கு அல்ல. ஏனெனில், மனிதனைத் துதி பாடுவது எப்பொழுதுமே எனக்குப் பிடிக்காத ஒன்று. மாறாக, எரேமியா தீர்க்கனுடைய மாண்பையும், சிறப்பையும் உங்களுக்கு உணர்த்தி அறிவிப்பதே இதன் நோக்கம்.

ஆம், வேதாகமத்தின் காரியங்களை ஓரளவு முறையாக அறிந்தவர்களின் மனதில், நீங்கா இடம் பிடித்திருக்கும் தேவ மனிதர்களில் ஒருவன் தான் இந்த எரேமியா. தீர்க்கதரிசிகளைப் பொறுத்தளவில் இந்த எரேமியா தன்னிகரில்லாதவன். எருசலேமிலிருந்து 3 மைல்கள் தொலைவிலுள்ள ஆனதோத் என்னும் ஆசாரிய கிராமத்தைச் சேர்ந்த இவனைப் பரலோகத்தின் தேவன், தாயின் வயிற்றில் உருவாக்குமுன்னே அறிந்து, கருவறையிலேயே இவனைப் பரிசுத்தம் பண்ணி, தீர்க்கதரிசன

ஊழியத்துக்குத் தெரிந்து கொண்டார் (எரே 1:5). "நான் பேச அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன்" என்று சொன்ன அந்தப் பருவத்திலேயே இவனைத் தன்னுடைய தீர்க்கதரிசன ஊழியத்துக்கு அழைத்தும் கொண்டார் (1:6). தேவ வார்த்தையினிமித்தம் தன் இல்லற வாழ்வைத் துறந்த ஒரு தியாகி இவன் (16:1,2).

யோசியா ராஜாவின் பதின்மூன்றாம் வருஷத்திலே இவன் தீர்க்கதரிசன ஊழியத்தைத் துவக்கின போது, தேவ விரோதச் செயலினிமித்தம் ஏற்கனவே வடக்கு இராஜ்ஜியமாகிய இஸ்ரவேல் எதிரிகளிடம் வீழ்ந்து போயிருந்தது. தெற்கு ராஜ்ஜியமாகிய யூதாவின் எருசலேம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள் தவிர பிறபகுதிகளும் பிடிபட்டுப் போயிருந்தன. எருசலேம், அப்பொழுது தன்னை விக்கிரகங் களுக்கு அடிமைப்படுத்தியிருந்தது. தேவனுடைய நகரம் என்று அழைக்கப் பட்ட இந்த எருசலேமைக் காப்பாற்றும்படியாய்த் தன் கடைசி கட்ட முயற்சியாகத்தான் தேவன் நம்முடைய எரேமியாவை அழைத்தார். மிகுந்த தயக்கத்தோடும், வெகு தாழ்மையோடும் இளம் வயதில் தேவ கட்டளையை ஏற்றுக் கொண்டிருந்தாலும், தேவப்பணி என்று வந்த போது சற்றேனும் இவன் சளைக்கவில்லை. அபாரத் துணிவோடும், மிஞ்சின வைராக்கியத் தோடும் தன் ஊழியப்பணியை நடத்திக் காட்டினான்.

இவனால் தன் ஊழியப் பணியில் வெற்றி பெற முடியவில்லை என்பதும், எருசலேமைக் காப்பாற்ற முடியவில்லை என்பதும் உண்மை தான். ஆயினும், தேவன் இட்ட பணியில் அவன் கிஞ்சித்தும் தோற்றுப் போகவில்லை. ஆம், எரேமியா வசைச் சொற்களால் அலங்கரிக்கப்பட்டான் (12:6 ). அடித்துத் துன்புறுத்தப்பட்டான் (38:6). காவலில் வைக்கப்பட்டான் (37:15,16). இருப்பினும், தேவ கட்டளைக்கு அவன் எந்த நிலையிலும் சற்றேனும் ஒய்வு கொடுக்கவில்லை. தேவன் என்னத்தைப் பேசும்படி சொன்னாரோ அதை அப்படியே பேசினான். இப்படி தேவனால் ஏவப்பட்டுப் பேசின ஒரு வசனம் தான், இந்த மாதத்துக்கான தலைப்பாகவும், பகுதியாகவும் உள்ளது.

**"இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று கர்த்தர் சொல்லுகிறார், நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிட்டால், நீ இனி அலைந்து திரிவதில்லை" (எரே 4:1).**

இந்த வசனத்தைக் கொண்டு தேவன் இஸ்ரவேலை, குறிப்பாக எருசலேமின் குடிகளை மனந்திரும்ப அழைக்கிறார். மனந்திரும்பு என்ற பொருளைக் கொடுக்கக்கூடிய பழைய ஏற்பாட்டு வார்த்தைக்கான எபிரெய பதத்தின் பொருள் **திரும்பு** அல்லது **திரும்ப வருதல்** என்பது. இது ஒரு ஆழமான வார்த்தை. இதன்படி செய்வதற்கு மனம், இருதயம், செயல் ஆகிய மூன்றும் இணைந்து செயல்படுதல் அவசியம். பழைய, புதிய ஏற்பாடுகள், மனந்திரும்புதலுக்கு ஒரே பொருளையே தருகிறது. அங்கே **திரும்பு** என்று சொல்லுகிற அதே தேவன் தான், இங்கு **மனந்திரும்பு** என்று கூறுகிறார்.

சரி, இம்மாதத்திற்காக நாம் தெரிந்து கொண்டுள்ள எரேமியா 4:1ம் வசனத்தை நாம் அருகில் சென்று பார்த்தால், அதிலிருந்து நாம் ஒரு மூன்று

பாடங்களைக் கற்றுக் கொள்ள முடியுமென்று தெரிகிறது. ஆகவே, அப்பாடங்கள் என்னவென்று இப்பொழுது நாம் பார்த்துப் பயனடைவோம்.

**I இஸ்ரவேலே, நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால்...... (வ. 19)**

எரே 4:1ம் வசனத்தின் முதல் பகுதி சொல்லும் பாடம், ஒருவன் தேவனிடத்தில் திரும்புவதற்கு அதற்கேற்ற மனம் வேண்டுமென்பது.

சர்வவல்லமையுள்ள தேவன், எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து தான் அழைத்து வந்த இஸ்ரவேல் ஜனங்களுக்குக் கொடுத்த கட்டளைகளில் முதலாவது கட்டளையே **என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்** என்பது (யாத். 20:3).

இப்படிச் சொல்வதோடு அவர் நிற்காமல், இரண்டாம் கட்டளையாக, மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம் என்றும் சொல்லி யுள்ளார் (20:4). ஆனால், இந்த நன்றி கெட்ட இஸ்ரவேலர்களோ, சர்வ வல்லவரை விட்டு விலகி விக்கிரகங்களுக்குத் தங்களை கொஞ்சம் கொஞ்சமாக அடிமைப்படுத்தினர். எரேமியாவின் நாட்களில் இச்சீர்கேடு உச்ச கட்டத்தை அடைந்திருந்தபடியால் வேதனையுற்ற தேவன், எரேமியாவைக் கொண்டு ஒரு கடைசி வாய்ப்பைக் கொடுக்க முன்வந்தார்.

இங்கே, பாருங்கள், பரலோகத்தின் தேவன், அவரால் நினைக்கப் படுவதற்கு எந்தத் தகுதியுமில்லாத மனிதனைப் பார்த்துக் கெஞ்சாக் குறையாக **நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால்**, என்று கூறியுள்ளார். திரும்புகிறாயா, இல்லையா என்று அதட்டி, மிரட்டிப் பணியவைக்கும் அதிகாரம் கொண்ட தேவன், தன் அதிகாரத்தை அணுவளவும் பயன் படுத்தாமல், **மனதாயிருந்தால்** என்று சொல்வதை நாம் கவனிக்க வேண்டும். தேவன் எவ்வளவு இரக்கமுள்ளவராக இருந்தால் இப்படிச் சொல்லியிருப்பார் என்று எண்ணிப் பாருங்கள். ஆதியிலே ஏதேன் தோட்டத்தில், ஆதாம், ஏவாளுக்கு கொடுத்த சுய உரிமை என்ற அதிகாரத்தை, அதன் பிறகு அவன் எவ்வளவு தான் கெட்டுப்போயிருந்தாலும் அவனிடமிருந்து பறிக்கவே இல்லை. மனம் மாற அவர் மாந்தரல்ல என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம். ஒவ்வொரு காரியத்திலும் அவனாக முடிவெடுக்க வேண்டுமென்றே அவர் விரும்புகிறார். ஆகவே தான், "**நீ திரும்புகிறதற்கு மனதாயிருந்தால்**" என்று கூறியுள்ளார்.

ஆக, ஒருவன் தேவனுக்கடுத்த காரியத்தில் நியாயமானதைச் செய்ய **மனம்** அவசியம். ஒருவன் தேவனுக்கும் அவருடைய வார்த்தைகளுக்கும் கீழ்ப்படிவதும், கீழ்படியாமற் போவதும் மனதின் தன்மையைப் பொறுத்த ஒன்று தான். கீழ்ப்படிகிறவர்களுக்கு ஆசீர்வாதம், கீழ்ப்படியாதவர்களுக்கு சாபம். சீரியா நாட்டுப் படைத்தளபதியாகிய நாகமான், தேவ மனிதனாகிய எலிசாவின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தான். யோர்தானில் ஏழுதரம் முழுகி சுகம் பெற்றான். (IIஇராஜா 5:14). ஆனால், இயேசுவண்டை ஆசையாய் ஓடிவந்த பணக்கார வாலிபன், "உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு" (மாற். 10:21) என்ற இயேசுவின் வார்த்தைகளை

ஏற்றுக் கொள்ளாமல், அவன் விரும்பின நித்திய ஜீவனை இழந்து போனான். அதன் மூலம், சாபத்தின் சங்கமமாகிய நரகத்திற்குத் தன்னைப் பாத்திர வானாக்கினான்.

ஒரு சமயம், இயேசு ஆண்டவரால், சுகப்படுத்தப்பட்ட பிறவிக் குருடனை, அவரால் நடப்பிக்கப்பட்ட அற்புதத்தைப் பொய்யென்று நிரூபிக்கும்படியாய்ப் பரிசேயர்கள் அவனைப் பாடாதபாடுபடுத்தினர். கேள்வி மேல் கேள்வி கேட்டும், அவன் மடங்காததினால், அவன் பெற்றோரிடம் சென்றனர், அவர்களும் பிடி கொடுக்காததால், மீண்டும் அவனிடம் வந்து உன் கண்களை எப்படித் திறந்தான் என்றார்கள் (யோவா 9:26). இவர்களின் விஷமத் தொல்லைத் தாங்க முடியாத, குருடனாயிருந்து சுகம் பெற்ற அந்த மனிதன், **அவருக்குச் சீஷராக உங்களுக்கும் மனதுண்டோ?** என்றான் (9:27). ஒரு காரியத்தைச் செய்வதற்கு **மனது** எவ்வளவு முக்கியமென்பதை அவன் கேட்ட கேள்வி சொல்லுகிறது. அடுத்து, எருசலேமை இரட்சிக்கும்படியாய் எவ்வளவோ பிரயாசைகள் எடுத்த இயேசு, சிலுவைக்குப் போவதற்குக் கொஞ்சம் முன்னதாக, எருசலேமைப் பார்த்து, **உங்களுக்கோ மனதில்லாமற் போயிற்று** என்று கண்ணீர் மல்கக் கூறினார் (மத். 23:37). ஆவிக்குரிய வாழ்வுக்கு **மனம்** இவ்வளவு முக்கியமாக இருக்கிறபடியால் தான் யோவான் ஸ்நானகனும், நமது ஆண்டவரும் **மனந்திரும்புங்கள்** பரலோக ராஜ்ஜியம் சமீபமா யிருக்கிறது என்று பிரசங்கித்தனர் (மத். 3:1; 4:17).

அருமையானவர்களே! நாம் ஒவ்வொருவரும் எப்படிப்பட்ட மனம் கொண்டவர்களாக ஆவிக்குரிய வாழ்வில் இருக்கிறோம்? நம்முடைய மனம் தேவ காரியங்களுக்கு உடனடியாக கீழ்ப்படியக் கூடிய மனமாக இருக்கிறதா அல்லது கீழ்ப்படிய மறுத்து எதிர்த்து நிற்கக்கூடிய மனமாக இருக்கிறதா? சொல்லுங்கள். தேவன் தமக்கு கொடுத்திருக்கும் சுதந்திரத்தை நாம் ஒருபோதும் இறுமாப்பாக ஆளாமல் (1பேது 5:3). அவர் சித்தத்திற்கு நம்மை ஒப்புக் கொடுப்பவர்களாக இருப்பது நல்லது. அதுதான் நன்மையானது, ஆசீர்வாதமானது.

**II <u>என்னிடத்தில் திரும்பு (வ.16)</u>**

எரேமியா 4:1ம் வசனத்தின் இரண்டாம்பகுதியிலிருந்து நமக்குக் கிடைக்கும் பாடம், திரும்புகிற ஒருவன் தேவனிடத்திற்கு திரும்ப வேண்டும் என்பது.

இன்றைய உலகத்தை நாம் கவனித்தால், திரும்புதல் என்பது எல்லா இடங்களிலும், எல்லா மட்டங்களிலும் நடந்து கொண்டுள்ள ஒன்றாகவே உள்ளது. **திரும்புகிற** வேலையை கிட்டத்தட்ட எல்லாரும் செய்து கொண்டு தான் உள்ளனர். ஒரு சமயத்தில் ஏதோ ஒரு தெய்வத்தை வணங்கி கொண்டு இருப்பார்கள். வேறொரு தெய்வத்தின் பக்கமாக திரும்புகிறார்கள். இதுதான் சரி என்று ஏதோ ஒரு வழிபாட்டு தலத்திற்குப் போய்க் கொண்டிருந்தவர்கள், பிறகு வேறொரு வழிபாட்டு தலத்திற்கு திரும்புகிறார்கள், ஒருகாலத்தில், ஏதோ ஒரு பக்திமுறையை பின்பற்றியவர்கள், வேறொரு முறைக்குத் திரும்புகிறார்கள். இன்னும், தெய்வங்களை வழிபட்டு வந்தவர்கள், சில நேரங்களில் தெய்வங்களை விட்டு விலகி மனிதர்களை வழிபடத்திரும்பும்

கூத்தும் கூட நம் நாட்டில் நடக்கும் ஒன்றாகவே உள்ளது. இவை போக, அரசியல், சமுதாயம், கலாச்சார காரியங்களிலும் திரும்புதல் என்பது சகஜமான ஒன்றாகவே உள்ளது.

ஆனால், இங்கே எரேமியா தீர்க்கன் இப்படிப்பட்ட பொதுவான திரும்புதலைக் குறித்துப் பேசாமல், தன்னை உண்டாக்கினவரிடத்தில் திரும்பும் ஆவிக்குரிய திரும்புதல் பற்றி அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார். மெய்யான தேவனையும், அவர் தந்திருக்கும் சத்திய வழியையும் விட்டு அங்கும், இங்கும், எங்கும் திரும்புவது ஒருபோதும் அவருக்கு ஏற்புடையதல்ல. இன்றைக்கு மனிதன் தான் செய்கின்ற ஒரு தவறிலிருந்து இன்னொறு தவறிற்கு திரும்பி விட்டு, நான் திரும்பி விட்டேன் என்று சுயத்திருப்தி பட்டுக் கொள்கிறான். இதுகுறித்து, ஓசியா தீர்க்கன் கூறுவதைப் பாருங்கள். **திரும்புகிறார்கள், ஆனாலும் உன்னதமான வரிடத்திற்கு அல்ல** (ஓசியா 7:16) என்று. ஓசியாவின் நாட்களில் விக்கிரகங்களிடமும், பொய்யான தெய்வங்களிடமும் திரும்பியவர்கள், மீண்டும் வேறொரு பொய்யான ஒன்றிடம் திரும்பினார்களேயல்லாமல், உன்னதமானவரிடத்தில் திரும்பவில்லை. இது எவ்வளவு ஒரு கேடான நிலை என்று பாருங்கள்.

அருமையானவர்களே! இன்றைக்கு கிறிஸ்தவ மத உலகில் காணப்படும் யதார்த்த நிலை அப்படியே எரேமியாவின் காலத்தையும், ஓசியாவின் நாட்களையும் பிரதிபலிப்பதாகவும், நினைவூட்டுவதாகவும் உள்ளது. தேவனிடத்திலும், அவரால் திட்டமிட்டுக் கட்டப்பட்ட சபை யினிடத்திலும் (எபே 3:9). உன்னதமானவரிடத்திலும், அவருடைய குமாரனாலே கொடுக்கப்பட்ட இரட்சிப்பை அருளும் சுவிசேஷத் தினிடத்திலும், திரும்பாமல், எங்கெங்கோ திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அன்றைக்கு உன்னதமானவரை விட்டு விட்டு பொய்யான விக்கிரகங்களின் பின்னால் அலைந்தது போல, இன்றைக்கு இயேசுவாலே **வாக்களித்துக் கட்டப்பட்ட** (மத் 16:18). அவர் தம் சொந்த **இரத்தத்தைச் சிந்தி சம்பாதித்த** (அப். 20:28) **சபையை விட்டு விட்டு,** மனிதர்களால் கட்டப்பட்ட, வேத வசனங்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத சபைகளிடத்திற்குத் திரும்பி இருக்கிறார்கள். இன்னும் திரும்பிக் கொண்டே இருக்கிறார்கள். அன்றிலிருந்து, இன்று வரை இந்த மானிட சமுதாயம் எப்படி ஒரே விதமாகச் சிந்தித்துச் செயல்பட்டு கொண்டிருப்பது ஆச்சரியமான ஒன்றாகவே உள்ளது. ஆனால், தீமை செய்ய திரளான பேர்களைப் பின்பற்றாதிருப்பாயாக (யாத். 23:2) என்றே வசனம் எச்சரிக்கிறது.

உன்னதமானவரிடத்தில் திரும்புங்கள் என்று சொல்லும் தீர்க்கன் ஓசியா, உன்னதமானவரிடத்தில் எப்படி திரும்ப வேண்டுமென்றும் கூறுகிறார். அதாவது, **வார்த்தைகளைக் கொண்டு கர்த்தரிடத்தில் திரும்புங்கள்** (ஓசி14:2) என்று. அற்புதங்களும், நேரிடையான தேவ வெளிப்பாடுகளும் இருந்த அந்த நாட்களிலேயே, **வார்த்தைகளைக் கொண்டு** கர்த்தரிடத்தில் திரும்புங்கள் என்று சொல்லியிருப்பதை நாம் கவனிக்கத் தவறி விடக்கூடாது. ஆனால், அற்புதங்களும், நேரிடையான வெளிப்பாடுகளும் அற்றுப் போன (1கொரி. 13:8-10) இன்றைக்கு என்ன

நடக்கிறது? தேவனுடைய வார்த்தைகளுக்குக் கொடுக்கப்பட வேண்டிய உரிய முக்கியத்துவம் தேவனையும், கிறிஸ்துவையும் பின்பற்றுகிறோம் என்பவர்களால் கொடுக்கப்படுகிறதா?எதை நாடி கிறிஸ்தவம் போய்க் கொண்டிருக்கிறது? சொல்லுங்கள்!

வேத வசனங்கள் எனக்குத் தேவையில்லை. அதற்கு மாறாக, தேவன் என்னோடு பேச வேண்டும், எனக்கு தரிசனம் கொடுக்க வேண்டும், என்னிடத்தில் அற்புதம் செய்யவேண்டும், எனக்கு ஏதாவது அடையாளம் காட்ட வேண்டும், எனக்கு அந்நிய பாஷை தரவேண்டும், என்னை அபிஷேகத்தால் நிரப்ப வேண்டும், குறைந்த பட்சம் ஒரு சத்தமோ, அல்லது ஒளியோ எனக்கு வெளிப்பட வேண்டுமென்றல்லவா பெரும்பாலோர் கேட்கிறார்கள். ஆனால், தேவனோ, உன்னதமானவரிடத்தில் திரும்ப விரும்பும் ஒருவனுக்கு **தேவனுடைய வார்த்தை போதும்** என்று சொல்கிறார். யார் சொல்வது சரி? படைத்தவராகிய தேவனா அல்லது படைப்பாகிய மனிதனா? தேவனுடைய வார்த்தையின் மகிமையை எபிரெய ஆசிரியர் எங்ஙனம் விவரிக்கிறார் பாருங்கள். "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாகவும்" இருக்கிறது (எபி. 4:12). இப்படிப்பட்ட வசனத்தைத்தான், அப்போஸ்தலன் பவுல், எல்லாவற்றுக்கும் போதும் என்கிறார். (2 தீமோ. 3:16,17) அத்தோடு, **இரட்சிப்பின் வசனம்** (அப். 13:26). அதாவது, ஒருவனை என்றும் இரட்சிப்புக்கு வழிநடத்தும் வல்லமையுள்ள வசனம் என்று கூறுகிறார்.

அருமையானவர்களே, ஒருவனுடைய இரட்சிப்புக்கு **வசனம்** போதும், அவன் பரலோகம் செல்ல வசனம் தரும் **இரட்சிப்பு** போதும். அப்படியானால், மற்றெல்லாம் எதற்கு? தேவையே இல்லை தானே! வசனத்தின் மேன்மை பற்றி நம் எரேமியாவின் கூற்றையும் பாருங்கள். **"கர்த்தாவே உம்முடைய கண்கள் சத்தியத்தை அல்லவோ நோக்குகிறது"** (எரே 5:3). சத்தியம் என்றால் தேவனுடைய வசனம் (யோவா 17:17). தேவன் வசனத்தை நோக்குகிறார். அந்த தேவன் இரட்சிப்பை வசனத்தில் வைத்துமிருக்கிறார். ஆகவே, அவரிடத்தில் திரும்புவது நம்முடைய உண்மையான நோக்கமாக இருக்குமானால், அவருடைய வல்லமையான வார்த்தைகளிடத்தில், குறிப்பாக, இன்றைக்கு நம்மை கட்டுப்படுத்தும் கிறிஸ்து இயேசுவின் வார்த்தைகளடங்கிய **புதிய ஏற்பாட்டு வசனங்களிடத்தில்** திரும்ப வேண்டும். ஏனெனில், இயேசுவானவர் சொன்ன வசனங்கள் தான் நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கப்போகிறது (யோவா 12:48) இந்த உண்மை எப்போதும் நம் நினைவிலிருக்க வேண்டும்.

### III <u>நீ உன் அருவருப்புகளை என் பார்வையினின்று அகற்றிவிடு (வ.1)</u>

எரேமியா 4:1-ம் வசனத்தின் மூன்றாம் பகுதி நமக்கு சொல்லும் பாடம், தேவனிடத்தில் திரும்ப விரும்பும் ஒருவன், முதலாவது, **அருவருப்புகளை** அகற்றிவிட வேண்டுமென்பது.

மனதாயிருந்தால் என்னிடத்தில் திரும்பு என்று எரேமியாவை கொண்டு சொன்ன தேவன் அப்படி திரும்ப நினைப்பவர்களுக்கு ஒரு நிபந்தனை கொடுக்கிறார். எந்த ஒரு நிபந்தனையையும் விரும்பாத ஒரு காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பது உண்மைதான். தகுதி எதுவும் தேவையில்லை, ஆனாலும் உங்களுக்கு அப்படி நன்மை இருக்கிறது, இவ்வளவு நன்மை இருக்கிறது, எக்கச்சக்க வருமானம் இருக்கிறது என்ற விளம்பரங்களை நம்முடைய நாட்களில் நாள்தோறும் நாளிதழ்களிலும், தொலைக்காட்சியிலும் பார்த்து கொண்டு தான் உள்ளோம்.

ஆனால், சர்வவல்லவருடைய அணுகுமுறையையும், செயல் பாட்டையும் நாம் ஆதியிலே இருந்து கவனித்தால், அது வேறுவிதமாகவே இருந்து வந்திருப்பதை அறியலாம். இஸ்ரவேலை ஆசீர்வதிப்பது அவருக்குப் பிரியமான காரியமாக இருந்தாலும் (எண் 24:1) அந்த ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அவர் நிபந்தனைகளுக்கு உட்படுத்தியே வைத்திருந்தார், இன்றும் வைத்திருக்கிறார். நீ எதுவுமே செய்யத் தேவை யில்லை, எதையும் விடத்தேவையில்லை, எங்கும் போகத் தேவையில்லை, எதற்கும் கீழ்ப்படியத் தேவையில்லை. ஆனால், அனைத்து ஆசீர்வாதங் களும் உன் வசமாகும் என்று நம்முடைய நாட்களில் உள்ள பிரசங்கிகள் பலர் வாக்களிப்பது போல, தேவன் வாக்களிப்பதில்லை. "இதோ, இன்று நான் உங்களுக்கு முன்பாக ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் வைத்திருக்கிறேன். இன்று நான் உங்களுக்கு கற்பிக்கிற உங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்தீர்களானால் ஆசீர்வாதமும், எங்கள் தேவனாகிய கர்த்தரின் கற்பனைக்குக் கீழ்ப்படியாமல் இன்று நான் உங்களுக்கு விதிக்கிற வழியை விட்டு விலகி, நீங்கள் அறியாத வேறே தேவர்களைப் பின்பற்றுவீர் களானால் சாபமும் வரும்" (உபா. 11:26 - 28) என்று கூறியுள்ளார்.

எரேமியாவில், என்னிடத்தில் வா என்று அழைக்கிற தேவன், அப்படி வருவதற்கு முன்பாக **உன் அருவருப்புகளை** அகற்று என்று கூறுகிறார். அருவருப்பு என்பது, தேவன் வெறுக்கின்ற ஒன்று. தேவன் எவைகளை யெல்லாம் வெறுக்கிறார் என்பதைச் சொல்ல வேண்டுமானால் ஒரு பெரிய பட்டியல் போட வேண்டும். அதற்குப் பதிலாக, இதை ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம், தேவனிடத்தில் வருவதற்கு முன்பு **பாவத்தை** அகற்றிவிடு என்று. தேவன் எரேமியாவைக் கொண்டு சொல்லும்போது, **நீ உன் அருவருப்புகளை அகற்றி விட்டால், இனி நீ அலைந்து திரிவதில்லை** என்கிறார். அதன் பொருள், வரப்போகும், பாபிலோனியா படையெடுப்பின் பாதிப்பிலிருந்து நீ தப்பித்துக் கொள்ளலாம் என்பதே.

அருமையானவர்களே! அங்கே எரேமியா தீர்க்கனைக் கொண்டு சொல்லப்பட்டிருக்கும் அதே கருத்து தான் இன்றைக்கு நமக்கும் பொருந்து கிறதாக உள்ளது. வரப்போகும் நித்திய அழிவிலிருந்து நாம் நம்மை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமானால் பாவமாகிய அருவருப்புகளை நாம் அகற்றியாக வேண்டும். தேவனுக்கும், நமக்கும் இடையேயான பாவங்களை நாம் குழிதோண்டிப் புதைத்தாக வேண்டும். அப்படிச் செய்யாத பட்சத்தில், தேவனிடமிருந்து நாம் எந்த நன்மையையும், ஆசீர்வாதத்தையும் எதிர்பார்க்கமுடியாது. ஆவிக்குரிய வாழ்விலும், சரீர வாழ்விலும் நாம் அலைந்து திரிகிறவர்களாகவே இருப்போம்.

யோவான் ஸ்நானகன் ஊழியம் செய்த அந்த நாட்களில், அவனிடத்தில் ஞானஸ்நானம் பெறப் புறப்பட்டு வந்த திரளான ஜனங்களைப் பார்த்து.... **மனந் திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுங்கள்** என்றான் (லூக். 3:7,8). அதாவது, ஞானஸ்நானம் பெறுவதற்கு உங்களைத் தகுதியாக்கும் படியாய், உங்களுக்கும், தேவனுக்கும் இடையேயிருப்பவைகளை எடுத்துப் போடுங்கள் என்று எச்சரித்தான். தேவன் வெறுக்கும் அருவருப்புகளோடு நாம் தேவனிடத்தில் சேரவே முடியாது. ஆனால், இன்றைக்கு கிறிஸ்தவ உலகில் என்ன நடக்கிறது? பாவத்தைப் பற்றிப் பேச ஊழியர்களும் விரும்பு வதில்லை; பாவம் கண்டித்து உணர்த்தப் படுவதை விசுவாசிகளும் விரும்பு வதில்லை. ஒருவிதமான தேவ விரோதக் கூட்டு இரண்டு சாராருக்குமிடையே காணப்படுகிறது.

எனக்கன்பான தேவ ஜனமே! இப்படிப்பட்ட மோசடிகளின் மூலம் ஆவிக்குரிய வாழ்வில் நாம் யாரும் ஏமாந்து போக வேண்டாம். கிறிஸ்தவ மாத இதழ்களில் விதவிதமாக வெளிவரும் விதவிதமான வாக்குத்தத்த வசனங்களில் மயங்கி விட வேண்டாம். கிறிஸ்தவ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் டன் கணக்கில் வாரி வழங்கப்படும் ஆசீர்வாத வார்த்தை களிலும் உன் மதியை இழந்து விட வேண்டாம். எரேமியா போன்ற தேவ மனிதர்கள் பிழைக்கத் தெரியாதவர்கள் அல்ல. மாறாக, சத்தியத்தைச் சத்தமாகப் பேசியவர்கள். எச்சரிப்புக் கொடுப்பவர்கள் தான் தேவனுடைய உண்மையான ஊழியக்காரர்கள், அவர்கள் தான் தேவ வார்த்தைகள் என்று வரும்போது எந்த சலசலப்புக்கு அஞ்சாத பனங்காட்டு நரிகள் அவர்கள் தான் எதிர்ப்பைக் கண்டு அஞ்சாமல் எச்சரிப்பு கொடுப்பவர்கள். யோவான் ஸ்நானகனின் பிரசங்கம், இயேசுவின் ஊழியம், அப்போஸ்தலர்களின் சுவிசேஷப் பணி போன்றவை இந்த விதமாகத்தான் இருந்தது. புண்ணுக்குப் புனுகு போடுகிற வேலையை அவர்கள் யாரும் செய்யவில்லை. ஆனால், இன்றைய ஊழியமும், கிறிஸ்தவமும் இதற்கு எதிர் திசையிலே ஜம் ஜம் என்று போய்க்கொண்டிருக்கிறது. இந்த இழிநிலை, நித்திய நரகத்திற்குத்தான் வழிநடத்தும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க வேண்டாம்.

ஆகவே, இதை வாசிக்கும் அருமையானவர்களே, நித்திய நரகத்திலிருந்து நாம் நம்மை காப்பாற்றிக் கொள்ள, பாவமாகிய எல்லா அருவருப்புக்களிலிருந்தும், அதாவது, தேவனுடைய வார்த்தைகளுக்கு விரோதமாக நாம் செய்து கொண்டிருக்கும் எல்லா செயல்களிலிருந்தும் நம்மை விடுதலையாகும்படியாய், விசுவாசித்து (மாற். 16:16), மனந்திரும்பி (அப். 2:38), அறிக்கையிட்டு (ரோம 10:9,10), பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுவோம். (அப். 22:16). அதன் மூலம், நம்முடைய பூமிக்குண்டான சரீர வாழ்விலும், மறுமைக்குண்டான ஆவியின் வாழ்விலும் அலைந்து திரியாமல் நம்மை காப்பாற்றிக் கொள்ளுவோம். ஆமென்!

தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**E.Z.S. ராஜநாயகம்**

# கிறிஸ்துவின் வாழ்க்கை

கிறிஸ்துவானவர் இப்பூமியில் வாழ்ந்தார் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. இப்புவியிலிருந்து, ஏறக்குறைய இரண்டாயிர மாண்டுகள் முன்பு அவர் பரமேறிச் சென்றாலும், அவர் இங்கு வாழ்ந்த ஒவ்வொரு இடத்திற்குமான ஆதாரம் இருக்கிறது. நாம் காலத்தைப் பிரித்து வைத்திருப்பதும், நமது நாள் காட்டியும் அவரை நினைவுபடுத்துகிறது. இவ்வுலகில் மிக அதிகமாக விற்பனையாகும் வேதாகமம் அவருடைய இப்புவியின் வாழ்வு பற்றி சொல்லுகிறது. கிறிஸ்துவின் மார்க்கமும், அவர் வாழ்வின் தாக்கமும் இப்புவியில் அதிகம் பரவிக் கிடக்கிறது. போதனை, சட்டவியல், வரலாறு, கலை, புவியியல் இவைகளிலும் அவரின் தாக்கம் இல்லாமலில்லை.

அவரைப் பற்றி ஒரு அறிஞன் கூறும் போது இப்படியாகக் கூறுகிறான், அவர் சற்றொப்ப 33 ஆண்டுகள் வாழ்ந்தார், முறையான கல்விச் சாலைக்குச் சென்றதில்லை, சொத்துக்களை சேர்த்ததில்லை, பெரும் போர்படைகளை வழி நடத்தியதில்லை, தன் சொந்த வீட்டை விட்டு வெகு தூரம் சென்றதில்லை, மிகவும் ஏழை, தச்சனின் மகன், முப்பது வெள்ளிக்காசுக்கு காட்டிக் கொடுக்கப் பட்டார். பாடுபட்டு, இரத்தம் சிந்தி, இரண்டு கள்வர் நடுவே மரித்தார். ஆனால், வரலாறை மாற்றியமைக்கும் அளவு செயல்புரிந்தார், அதிக ஜனத்தை தன் வசம் இழுத்திருக்கிறார். மனிதனின் ஒழுக்கத்தையும், மனதையும், முடிவையும் மாற்றி அமைக்கும் அளவுக்கு செயல்புரிந்தார். இப்புவியில் வாழ்ந்த எல்லா மனிதரிலும், அதிகம் நேசிக்கப்படுபவர், அதிகம் பின்பற்றப் படுவரும் இவரே, அவர் ஒரு மாமனிதர், அவர் மனிதரை விட மேலானவர் ஆம் அவர் தேவ குமாரன். தேவன் அவரை அனுப்பினார், தேவன் அவரோடு இருந்தார், அவர் மீண்டும் தேவனிடம் சென்றார். கிறிஸ்துவின் நாளில் யூதரின் போதகராகிய நிக்கொதேமு சொல்லும்போது, "**அவன் இராக் கலத்திலே இயேசுவினிடத்தில் வந்து; ரபீ, நீர் தேவனிடத்தி லிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்ய மாட்டான் என்றான்**". (யோவான் 3:2).

ஆதியிலே கிறிஸ்து தேவனோடு இருந்தார். சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. (யோவான் 1:1-3). மனிதனை இரட்சிக்கும்படி இப்பூமிக்கு வந்த அவர், அதை நிறைவேற்ற தன் ஜீவனையே கொடுத்தார். அதை அவர் நிறைவேற்ற, பரலோகம் விட்டு, பாவமும், துன்பமும் நிறைந்த பூமிக்கு வர

வேண்டியதிருந்தது. அப்பொழுது தான், கன்னியாகயிருந்த மரியாளின் வாயிற்றின் பெத்தலகேம் என்னும் சிற்றூரில் பிறந்தார். அவர் இராஜாதி இராஜாவாலும், கர்த்தாதி கர்த்தர்களும், மிக உயர்ந்த மனிதர்களும் அவரை வந்து பணிந்து கொள்ளும் அளவுக்கு அவருக்கு தகுதி இருந்தாலும், அவர் சத்திரத்தில் இடமில்லாததால் முன்னணையிலே பிறந்தார். அச்சமயத்தில் உலகம் இந்த மகா சரித்திரத்தை கண்டுகொள்ளவில்லை, ஆனால், பரலோகத்தில் திரள் சேனை அதை தவறவிடவில்லை.

இத்தருணத்தில் மரியாளைக் குறித்து வேதம் விளம்பும்போது, அவள் தன் முதற்பேறான குமாரனைப் பெற்று, சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதிருந்தபடியினால், பிள்ளையைத் துணிகளில் சுற்றி, முன்னணையிலே கிடத்தினாள். அப்பொழுது அந்த நாட்டிலே மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கி, இராத்திரியிலே தங்கள் மந்தையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அவ்வேளையில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான், கர்த்தருடைய மகிமை அவர்களைச் சுற்றிலும் பிரகாசித்தது; அவர்கள் மிகவும் பயந்தார்கள். தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையிலே கிடத்தியிருக்கக் காண்பீர்கள்; இதுவே உங்களுக்கு அடையாளம் என்றான். அந்த க்ஷணமே பரமசேனையின் திரள் அந்தத் தூதனுடனே தோன்றி; உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி தேவனைத் துதித்தார்கள். (லூக்கா 2:7-14).

கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் நட்சத்திரத்தினால் வழிநடத்தப்பட்டு அவரைப் பணிந்து கொள்ளும்படியும், அவருக்கு காணிக்கை வைக்கவும் வந்தார்கள், அதைக் குறித்து வேதம் சொல்லும்போது, அவர்கள் அந்த வீட்டுக்குள் பிரவேசித்து, பிள்ளையையும் அதின் தாயாகிய மரியாளையும் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து அதை பணிந்து கொண்டு, தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து, பொன்னையும், தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் அதற்குக் காணிக்கையாக வைத்தார்கள் (லூக்கா 2:11).

இயேசு ராஜாவாக வந்துவிடுவார் என்ற எண்ணத்தினால் அவரை கொலை செய்ய திட்டமிட்டு கோபம் கொண்டான் ஏரோது. அவனின் சீற்றத்திலிருந்து தப்பிக்க, கர்த்தர், யோசேப்பை, மரியாளை அழைத்து கொண்டு எகிப்திக்கு போக வேண்டும் என்று வழிநடத்தினார். அங்கிருந்து, ஏரோது மரித்தான் என்ற செய்தி கேட்ட பின்பு தான் திரும்பினார்கள்.

அவர்கள் முந்தி வாழ்ந்த நாசரேத் என்னும் ஊருக்கு வந்து அங்கு வாழ்ந்தார்கள். மத்தேயு 2:23ல் அதற்கு வேறு காரணமும் சொல்லப்படுகிறது, நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம்பண்ணினார். நசரேயன் என்னப்படுவார் என்று, தீர்க்கதரிசிகளால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.

இயேசுவின் சிறுபிராயத்தைப் பற்றி நமக்கு அதிகம் சொல்லப்பட வில்லை. அவர் எருசலேமுக்கு கொண்டு செல்லப்பட்டு கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்கப்பட்டார் என்று வாசிக்கிறோம். (லூக்கா 2:22-24). மேலும் வாசிக்கையில், "கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தின்படி சகலத்தையும் அவர்கள் செய்து முடித்தபின்பு, கலிலேயா நாட்டிலுள்ள தங்கள் ஊராகிய நாசரேத்துக்குத் திரும்பிப்போனார்கள். பிள்ளை வளர்ந்து, ஆவியிலே பெலன் கொண்டு, ஞானத்தினால் நிறைந்து. தேவனுடைய கிருபையும் அவர்மேல் இருந்தது". என்று காண்கிறோம் (லூக்கா 2:39,40).

தொடர்ந்து வாசிக்கையில், இயேசு பன்னிரண்டாம் வயதாகும் போது, அவருடைய பெற்றோர்கள், பஸ்கா பண்டிகைக்காக எருசலேமிற்கு கொண்டு சென்றார்கள். அவர்கள் திரும்பி வருகையில், இயேசு அவர்களோடு இல்லை என்பதைக் கண்டு கொண்டார்கள். அவர்கள் அவரைத் தேடிக் கொண்டு வந்தபோது, மூன்று நாளைக்குப் பின்பு, அவர் தேவாலயத்தில் போதகர் நடுவில் உட்கார்ந்திருக்கவும், அவர்கள் பேசுகிறதைக் கேட்கவும், அவர்களை வினாவவும் கண்டார்கள். அவர் பேசக் கேட்ட யாவரும் அவருடைய புத்தியையும் அவர் சொன்ன மாறுத்தரங்களையுங்குறித்துப் பிரமித்தார்கள். தாய் தகப்பன்மாரும் அவரைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அப்பொழுது அவருடைய தாயார் அவரை நோக்கி மகனே! ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்? இதோ, உன் தகப்பனும், நானும் விசாரத்தோடே உன்னைத் தேடினோமே என்றாள். அதற்கு அவர்; நீங்கள் ஏன் என்னைத் தேடினீர்கள்? என் பிதாவுக்கடுத்தவைகளில் நான் இருக்க வேண்டியதென்று அறியீர்களா என்றார். தங்களுக்கு அவர் சொன்ன வார்த்தையை அவர்கள் உணர்ந்து கொள்ளவில்லை. பின்பு அவர் அவர்களுடனே கூடப்போய், நாசரேத்தூரில் சேர்ந்து, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார். அவருடைய தாயார் இந்த் சங்கதிகளை யெல்லாம் தன் இருதயத்திலே வைத்துக்கொண்டாள். இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்திருந்தார். (லூக்கா 2:46-52).

லூக்கா ஒன்றாம் அதிகாரத்தில் யோவான் ஸ்நானகன் பிறப்பைப் பற்றியும் வாசிக்கிறோம். சகரியாவும், எலிசபெத்தும் மிகவும் வயதாக இருக்கையில் அவன் பிறந்தான். இது, ஏதோ திடீர் என்று நடந்தல்ல, இது தேவ திட்டம் இயேசுவுக்கு வழியை ஆயத்தம் பண்ணும்படி அவன் அவருக்கு முன்னோடியாக வந்தான். அதன் பின்பு இருவரும் சந்திக்கிறார்கள். அதை

பற்றி நாம் வாசிக்கையில், அப்பொழுது யோவானால் ஞானஸ்நானம் பெறுவதற்கு இயேசு கலிலேயாவை விட்டு யோர்தானுக்கு அருகே அவனிடத்தில் வந்தார். யோவான் அவருக்குத் தடை செய்து, நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா எனறான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக; இப்பொழுது இடங்கொடு, இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறது என்றார். அப்பொழுது வானம் அவருக்கு திறக்கப்பட்டது, தேவ ஆவி புறவைப் போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 3:13-17).

நாம் ஏற்கனவே பார்த்ததுபோல, இயேசுவானவர் யோசேப்போடும், மரியாளோடும், தச்சனின் குமாரனாக வாழ்ந்தார். அவர் தன் தந்தையோடு வாழ்ந்த காலத்தில், அவருக்கு உதவியாக இருந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை. பின்பு அவர் வளர்ந்தார். லூக்கா 3:23ன் படி அவர் ஏறக்குறைய 30 வயதில் தனது ஊழிய வாழ்வை ஆரம்பித்தார் என நம்புகிறார்கள். அவர் பொதுவாழ்வில், நடந்த முதல் அற்புதம், கலிலேயாவிலுள்ள கானா ஊரில் நடந்தது. அங்கு அவர் தண்ணீரை திராட்ச ரசமாக மாற்றினார். (யோவான் 2:1-11). மற்றொரு சமயத்தில் நாம் வாசிக்கையில், அவர் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு, தாம் வளர்ந்த ஊருக்கு வந்தார்; அவருடைய சீஷரும் அவரோடே கூட வந்தார்கள். ஓய்வுநாளான போது, ஜெப ஆலயத்தில் உபதேசம் பண்ணத் தொடங்கினார். அநேகர் கேட்டு, ஆச்சரியப்பட்டு, இவைகள் இவனுக்கு எங்கேயிருந்து வந்தது? இவன் கைகளினால் இப்படிப்பட்ட பலத்த செய்கைகள் நடக்கும்படி இவனுக்குக் கொடுக்கப்பட்ட ஞானம் எப்படிப்பட்டது? இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு, யோசே, யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும் இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா? என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி; தீர்க்கதரிசி ஒருவன் தன் ஊரிலும் தன் இனத்திலும் தன் வீட்டிலுமேயன்றி வேறெங்கும் கனவீனமடையான் என்றார். அங்கே அவர் சில நோயாளிகள் மேல் கைகளை வைத்து, அவர்களைக் குணமாக்கினதேயன்றி, வேறொரு அற்புதமும் செய்யக் கூடாமல் அவர்களுடைய அவிசுவாசத்தைக் குறித்து ஆச்சரியப் பட்டு; கிராமங்களிலே சுற்றித்திரிந்து, உபதேசம் பண்ணினார் (மாற்கு 6:1-6).

அவர் வாழ்வில் கடைசி மூன்று ஆண்டுகளில், அவரின் பிரசங்கம், அவர் செய்த அற்புதங்கள், ஆகியவைகளின் மூலம் அவரின் புகழ் இஸ்ரவேல் நாடெங்கும் பரவியது. அவரின் பரமேறுதலுக்குப் பின்பு அவருடைய போதனையை தொடர்ந்து செய்ய, பன்னிரெண்டு அப்போஸ்தலர்களை தெரிந்தெடுத்தார். அவரின் பரமேறுதலுக்குப் பின் அவருக்கு வேறொரு தேற்றரவாளனை பரிசுத்த ஆவியை அவர்கள் வழிநடத்தும் படியும், அவர்கள் அற்புதங்களை செய்து, இயேசுவின் போதனையை உறுதிப்படுத்தவும் அனுப்புவேன் என்று வாக்குக்கொடுத்தார்.

அவர் நல்ல மனிதனாக இருந்தார், அவர் எங்கு சென்றாலும் ஜனங்களுக்கு நன்மை செய்தார், தேவனுடைய சித்தத்தை எப்பொழுதும் செய்தார், போதித்தார். ஆனாலும் அவர் மேல் பொறாமை கொண்டவர்கள் அவரை கொலை செய்ய திட்டமிட்டார்கள். அவர் முப்பது வெள்ளிக்காசுக்கு தன் அப்போஸ்தலனால் காட்டிக்கொடுக்கப்பட்டு, தவறான முறையில் விசாரிக்கப்பட்டு, சிலுவை மரணம் என்ற தீர்ப்பைப் பெற்று, இரு கள்வர்களுக்கு நடுவில் உலக பாவத்தை சுமந்து தீர்க்கும்படி மரித்தார். இவர் தான் கிறிஸ்துவாகிய தேவ குமாரன். அவர் இப்படி மரிக்க வேண்டியதில்லை, ஆனால், நம்மை இரட்சிக்கும்படி தான் இப்படி மரித்தார். அவர் மரணத்திலிருந்து தப்பிக்கும்படி ஆயிரமாயிரமான தேவ தூதர்களை அழைத்திருக்கலாம். ஆனால் மனிதனை அவர் இரட்சிக்கும்படி அவர் மரணத்தை ருசிபார்த்தார். மரணத்தை ருசிபார்த்த அவர், மரித்தவராகவே இருக்க வில்லை, மூன்றாம் நாள் மரித்தோரிலிருந்து எழுந்தார், 40 நாள் அளவும் பலருக்கு தரிசனமானார், பின்பு பரமேறி தனது பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்து இராஜாதி, இராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார். இந்நாள் வரைக்கும் அவர் அங்கு இருக்கிறார். ஆனால், ஒரு நாள் அவர் வாக்கு செய்தது போல மீண்டும் வருவார். இப்பொழுது, நம்மை அவர் இரட்சிக்கிறார், ஆனால் அன்று அவர் நம்மை நியாயந்தீர்ப்பார்.

**J.C. Choate** **J.C. சோட்**

## தேவ வார்த்தை பூரணமானது என்பதற்கான ஏழு காரணங்கள்

1. *இது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டது. (யோவா 14:16)*
2. *இது நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும் (யோவா 12:48)*
3. *இது ஜீவனுக்கும், தேவ பக்திக்குமான எல்லாவற்றையும் கொண்டுள்ளது. (II பேது 1:3)*
4. *இது குறைவற்றது (சங். 19:7, கலா. 1:6-9)*
5. *இத்துடன் கூட்ட முடியாது. (யூதா 3, வெளி. 21:18,19)*
6. *இது கொடுக்கப்பட்ட நோக்கத்தில் முழுமை கொண்டது. இரட்சிப்பை அருளுகிறது. (ரோம். 1:14-16)*
7. *இது ஒருபோதும் ஒழிந்து போகாது (மத். 5:18)*

பெண்கள் பகுதி

# தாய்மகள் உறவு

"**அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக் கன்றுகளை போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களை போலவும் இருப்பார்கள்**" (சங். 144:12). ஒரு பெண்ணுக்கு பெலத்தையும், அழகையும் கூட்டி வழங்கக்கூடியவள் அவளின் மகள், அந்த மகள் தேவன் விரும்பியபடி வளர்க்கப் பட்டிருப்பாளானால் மேற்கண்ட தாவீதின் வசனம் மிகவும் பொருத்த மானதாக இருக்கும். அதாவது நம் மகள் **சித்திரந்தீர்ந்த அரண்மனை மூலைக் கற்களைப் போல** இருக்க வேண்டுமானால் வேதாகமத்தின் அறிவுரைப்படி அவர்கள் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். இந்த மூலைக்கற்களைப் பற்றி பழைய ஏற்பாட்டில் சகரியா 9 : 15ல் பேசப்படுகிறது. இங்கு பலிபீடத்தின் கோடி என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏசாயா 51:1-ல், ஏசாயா கூறும்போது இந்த வகை கற்களைப் பற்றி பேசுகிறார். சாலமோனின் உன்னதப் பாட்டில் 8ம் அதிகாரம் 9ம் வசனம் "**அவள் ஒரு மதிலானால், அதின்மேல் வெள்ளிக்கோட்டையைக் கட்டுவோம், அவள் கதவானால், கேதுரு பலகைகளை அதற்கு இணைப்போம்**" என்று கூறுகிறது. தேவனுக்கு பயப்படும் பிள்ளைகளை நாம் உருவாக்க வேண்டும்.

ஒரு பிள்ளை பிறந்தது முதல் அவளுக்கு வித, விதமான, வண்ண, வண்ண ஆடைகளை உடுத்தி, பிஞ்சுக் கைகளால் விளையாடி, பிறகு வளர்ந்து வீட்டில் தனக்கு சிறு, சிறு உதவி செய்து, பருவமடைந்து நன்மை, தீமை, சந்தோஷம், துக்கம் இவைகளை தன் தாயுடன் பகிர்ந்து, இப்படித்தாயும் மகளும் என்ற உறவு பின்னிப் பிணைந்த ஒன்றாகவே இருக்கிறது. இந்த காலங்களில் தன் மகளின் எளிமையான வாழ்வு, பரிசுத்தம், யதார்த்தம் இவைகளில் அக்கறை கொண்டு, அவளுக்குள் இருக்கும் ஆத்துமாவுக்கு முக்கியத்துவம் கொடுத்து, பயிற்றுவித்து, எச்சரிக்கையுடன் கவனிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு ஒரு தாயினுடையது.

தேவனுக்கு ஒப்புக்கொடுத்த ஒரு வாழ்க்கை என்பது இருவருக்கும் பொதுவானது. இந்த விஷயத்தில் இருவரும் ஒன்றாக இருந்து செயல்பட்டு தங்களை தேவனுக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒரு தாய் தன் மகளுக்கு செய்யவேண்டிய மிகச் சிறந்த, மிக முக்கியமான காரியம் அவள் சரீரத்திலும், ஆவியிலும் தேவனை மகிமைப்படுத்தப் பழக்க வேண்டும். (1கொரி:6:20) தேவனை விசுவாசித்து, அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதை கற்றுக் கொடுக்கும போது, எதிர்காலத்தில் சந்திக்க வேண்டி வரும் பல பிரச்சனை களிலிருந்து விடுபட இது ஒரு அடித்தளமாக அமைந்து விடும்.

ஒரு தாய் தன் வாழ்க்கையை தேவனுக்கு ஊழியம் செய்ய ஒப்புக் கொடுக்கும்போது, தன் மகளும் அவ்வண்ணமே ஊழியம் செய்யவும், அதற்குண்டான நன்மைகளை அடையவும், இம்மைக்குரிய ஆசீர்வாதம் மாத்திரமல்லாமல் மறுமையையும் சுதந்தரித்துக் கொள்ள அது ஏதுவாகும். ரூத், நகோமி இருவரும் தாயும், மகளுமாக இல்லாவிட்டாலும் அவர்களுடைய அந்த அழகான உறவு இந்த உண்மைக்கு உதாரணமாக விளங்குகிறது. ஸ்திரீகள் நகோமியைப் பார்த்து, "**உன்னை சிநேகித்து, ஏழு குமாரரைப் பார்க்கிலும் உனக்கு அருமையாயிருக்கிற உன் மருமகள்**" (ரூத். 4:15) என்று சொன்னதிலிருந்து ரூத்தும், நகோமியும் தாய், மகள் உறவைப் பெற்றிருந்தார்கள் என்று நமக்கு நன்றாகவே விளங்குகிறது.

மாறாக, ஒரு தாய் தன் பிள்ளைக்கு, உலகப்பிரகாரமான பொருட்கள், சமுதாய அந்தஸ்த்து, புகழ், உலக மகிமை இவைகளை திணிக்கும்போது நாளடைவில் தன் பிள்ளையின் அன்பையும் இழந்து, தன் மகள் உலகத்தோடு உலகமாக மாறி தேவனை மறந்து விடவும் வழிகோலி விடும்.

சமையல் கட்டில் சமையல் செய்வதிலிருந்து, கடைக்குச் செல்வது, தைப்பது, வியாதியில், தேவையில் இருப்பவர்களை சந்திப்பது, அன்பைப் பற்றிய பல பாடங்களை கற்றுக் கொடுத்தல், இரக்கம், பொறுமை, தாழ்மை, கீழ்ப்படிதல் ஆகிய இந்த குணங்கள் தாயும், மகளுக்குமிடையே பின்னிப் பிணைந்திருக்க வேண்டும். பிரச்சனை, மாறுபாடுகள் வரும்போது வேத வசனத்தின் துணையோடு அவைகளைக் கையாள வேண்டும் என்பதை மறவாமல் கற்றுக்கொடுக்க வேண்டும்.

"அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு. நீயோ அவர்கள் எல்லோருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்" (நீதி 31:29) என்று குணசாலியான ஸ்திரீயைப் பற்றி பேசப்படுகிறது. இப்பேர்ப்பட்ட குணசாலியான ஸ்திரீகளை உருவாக்க தாய்மார்களால்தான் முடியும்.

எனவே தாய்மார்களின் பொறுப்பு குடும்பத்தில் மிக அதிக முக்கியமான இடத்தை பெறுவதால் மிகவும் ஜாக்கிரதையாக நம் பொறுப்பை நிறைவேற்றப் பிரயாசப்படுவோம். **சாந்தமும், அமைதலுமுள்ள ஆவியை** மனதிலே கொண்டு, அதை அலங்காரமாக்கினால் நம் மக்களும் அதைப் பார்த்து பின்பற்றுவர்கள் (1 பேது 3:4).

கொலோ 3:20, எபே 6:4லும் உள்ளபடி கர்த்தருக்கேற்ற சிட்சையிலும், போதனையிலும் மக்களை வளர்க்க வேண்டும். பிள்ளைகளில் அன்பு செலுத்தி அவர்களுக்கு கற்றுக் கொடுத்து, பரலோகத்தை குறிவைத்து ஏவுகணைகளாக அவர்களை எய்தி விடுவது தாயின் பொறுப்பு.

ஆக, கிறிஸ்துவுக்குள் அருமையானவர்களே, தேவனின் பெரிதான கிருபையினால் தாய்மார்களாகும் சிலாக்கியத்தை பெற்ற நாம் தேவன் பரிசுத்த வேதாகமத்தில் தாய்களுக்கான பொறுப்புகள் என்று எவைகளை வெளிப்படுத்தியிருக்கிறாரோ அவைகளின்படி செய்வோம். குடும்பத் திற்கும், நாம் சார்ந்திருக்கும் கிறிஸ்துவின் சபைக்கும் ஆசீர்வாதத்தை கொண்டுவருவோம். ஆமென்!.

**ரேச்சல் நாயகம்**

வாலிபர் பகுதி

# உனக்காக வைத்திருக்கும் அருமையான மூன்று காரியங்கள்

**வா**லிப நெஞ்சங்களே உங்களை இந்தக் கட்டுரையின் வாயிலாக மறுபடியும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். பிரியமானவர்களே தேவன் நமக்காக அருமையான காரியங்களை வைத்திருந்தாலும் அநேக வாலிபர்கள் பிசாசு இந்த உலகத்தில் வைத்திருக்கும் காரியங்களை நாடிச் செல்கிறார்கள். நாம், பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கும் போது உலக முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறதென்று பார்க்கிறோம். பிசாசனவன் வாலிபர்களை பணம், புகழ், கவர்ச்சி போன்ற வலைகளில் பிடித்துக் கொள்கின்றான். சுவிசேஷம் என்னும் வலையை விரித்து தேவனுக்காக அநேகரை பிடிக்க வேண்டிய வாலிபர்கள் தாங்களே சாத்தானின் வலையில் சிக்கிக் கொள்கிறார்கள். இது மிகவும் வேதனையான காரியம். பெரும்பாலான வாலிபர்கள் தங்கள் பெரும்பாலான நேரத்தை உலகப்பிரகாரமானக் காரியங்களில் செலவிடுகிறார்கள்.

நாம் எபேசியர் 5:15,16 வசனங்களில் வாசிக்கும்போது "ஆனபடியினாலே நீங்கள் ஞானமற்றவர்களைப் போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப் போல கவனமாய் நடந்து கொள்ளப்பார்த்து, நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ளுங்கள் என்று வாசிக்கிறோம். இந்த உலகத்தில் மிகவும் விலையுயர்ந்தது நேரமாகத் தான் இருக்கும். கிரேக்க தத்துவஞானியாகிய சாக்ரடீஸ் சொல்லும்போது ஒருவனிடம் இருக்கும் சொத்து அல்லது உடமைகளில் எல்லாம் சிறந்தது **நேரம்** தான் என்று சொன்னார். நாம் நம்முடைய பரிசுத்த வேதாகமத்தில் அநேக தேவனுடைய தாசர்கள் நேரம் அல்லது காலத்தின் தன்மைப் பற்றி சொல்லியிருக்கிறதைப் பார்க்க முடியும். பக்தனாகிய யோபு சொல்லும் போது **என் நாட்கள் நெய்கிறவன் எறிகிற நாடாவிலும் தீவிரமாய் ஓடுகிறது** என்று சொல்கிறார். இந்த வசனத்தில் யோபு தன்னுடைய ஜீவிய நாட்களின் தன்மைப் பற்றி விளக்குகிறார். யோபு சொல்லுவது முற்றிலும் சரியானதே. இந்த நாட்களில் நேரமானது ஒளி மற்றும் ஒலியை விட வேகமாகச் செல்கிறது. அந்த வேகத்தோடு ஈடுகட்ட முடியாவிட்டால் நாம் மிகுந்த சிரமத்திற் குள்ளாவோம். இந்த சந்தர்ப்பத்தை சாத்தான் நன்றாக பயன்படுத்திக் கொண்டு வாலிபர்களின் நேரத்தை, அவர்களுடைய கவனத்தை வேறு திசையில் திருப்பிவிட்டு வீணடித்துவிடுகின்றான். ஆனால், நாம் பிசாசுக்கு இடம் கொடுக்கக்கூடாது. மத்தேயு நான்காம் அதிகாரத்தில் நாம் பார்க்கும் போது சாத்தான் நம்முடைய அருமை இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை தன்னுடைய வலையில் சிக்க வைக்க பார்த்தான். ஆனால், முடியவில்லை. சாத்தான் நம் தேவனைப் போல சர்வ ஞானியல்ல அவனுக்கு எல்லாம்

தெரியாது. ஆனால், அவன் நம்முடைய நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பதால் நம்முடைய பலவீனங்களை அறிந்துகொள்கிறான். (யாக்கோபு 1:14)ல் நாம் வாசிக்கும்போது அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான் என்று பார்க்கிறோம். சாத்தான் நம்மைக் கூர்ந்து கவனித்து நாம் எதில் பலவீனமாயிருக்கிறோம் என்பதை அறிந்து கொண்டு நம்மை தன்னுடைய வலையில் சிக்க வைக்கப் பார்க்கின்றான். நம்முடைய இருதயத்தின் நினைவுகள் சாத்தானுக்குத் தெரியாது, நம்முடைய மனதுக்குள்ளேயே அவன் கிரியை செய்கிறான் என்ற கருத்து தவறானது. சர்வ வல்லமையுள்ள தேவனுக்கு மாத்திரமே நம்முடைய இருதயத்தின் நினைவுகள் தெரியும்.

ஆனால், அதே நேரத்தில் சத்தானுடைய வல்லமையை நாம் குறைவாக மதிப்பிட்டு விடக்கூடாது. பேதுரு சொல்லும் போது, "உங்கள் எதிராளியாகிய பிசாசனவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித்திரிகிறான் என்கிறார் (1 பேதுரு 5:8). ஆனால், 1 யோவான் 4:4ல் நாம் வாசிக்கும் போது உலகத்திலிருக்கிறவனிலும், உங்களிலிருக்கிறவர் பெரியவர் என்று பார்க்கிறோம். எனவே நம்மிலிருக்கிற தேவன் பிசாசை விட பெரியவராக யிருப்பதால் பிசாசுக்கு நாம் எதிர்த்து நின்றால் அவன் நம்மை விட்டு ஓடிப்போவான். (யாக்கோபு 4:7). சரி இப்போது தேவன் நமக்காக வைத்திருக்கும் அருமையான மூன்று காரியங்களை கவனிப்போம்.

## I அருமையான சிலாக்கியம் – வசனத்தைக்கேட்கும்படி

பிரியமானவர்களே, அநேகர் இந்த உலகத்தில் இன்றும் ஒரே ஒரு சுவிசேஷப் பிரசங்கத்தைக் கூட கேட்டதில்லை. இந்த உலகத்தில் அநேக பணக்காரர்கள் அநேக காரியங்களை கேட்டிருக்கலாம், பார்த்திருக்கலாம். ஆனால், அவைகள் ஒன்றுமே சுவிசேஷப் பிரசங்கத்திற்கு ஈடாகாது. சுவிசேஷமாகிய தேவனுடைய வார்த்தையில் வல்லமையிருக்கிறது, அதில் ஜீவன் இருக்கிறது. எனவேதான், அது ஆத்துமாவை இரட்சிக்கிறது. இப்படிப்பட்ட தேவனுடைய வார்த்தைகளால் நம்மை நாம் நிரப்பிக் கொள்ள வேண்டும். எனவே நாம் தேவனுடைய வார்த்தைகளை தியானிக்க வேண்டும். சங்கீதக்காரன் சொல்லும்போது "உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது". (சங்கீதம் 119:105). இது மெய்தான். ஏனென்றால் இருள்சூழ்ந்த நம்முடைய வாழ்க்கைக்கு நல்ல பாதையை காட்டக்கூடிய வெளிச்சமாய் தேவனுடைய வசனம் இருக்கிறது. வாலிபராகிய நாம் நம்முடைய வழியை எதினால் சுத்தம் பண்ண முடியும்? தேவ வசனத்தின்படி நம்மை காத்துக் கொள்ளுகிறதினால் தானே! ஆனால் தேவனுடைய வசனத்தை நாம் தியானித்தால் மாத்திரம் போதாது அல்லது தேவனுடைய வசனத்தால் நிரப்பட்டால் மாத்திரம் போதாது மாறாக, அதை நாம் நடைமுறைப் படுத்த வேண்டும் அப்போதுதான்

தேவனிடத்திலிருந்து முழுமையான ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதைப்பற்றி யாக்கோபு ஆசிரியர் சொல்லும் போது "அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாத படிக்குத் திருவசனத்தை கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்" என்று கூறுகிறார். (யாக்கோபு 1:22)

## II அருமையான விதி – விசுவாசிக்கும்படி

பலவிதமான நெருக்கடிகளிலிருந்து தேவன் நம்மை விடுவித்த விதத்தை நினைத்துப்பாருங்கள். அதற்குக் கைம்மாறாக, தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது அவரை விசுவாசிப்பதுதான். விசுவாச மில்லாமல் நாம் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எபிரெயர் 11:6ல் நாம் வாசிக்கிறோம். விசுவாசமில்லாமல் சந்தேகப் படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பா யிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இந்த உலகத்தில் அநேகர் கென்னடி, காந்தி போன்றோர் அப்படி செய்தார்கள் இப்படிச் செய்தார்கள் என்று அவர்களை நேரில் கண்டிராமல் வரலாற்றை படிப்பதன் மூலமாகவோ அல்லது மற்றவர்கள் சொல்லக்கேட்டோ நம்புவார்கள் ஆனால், தேவன் நம்முடைய பாவங்களுக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேத வாக்கியங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசிக்க மறுப்பார்கள். பிரியமானவர்களே, நம்முடைய விசுவாசத்தின் அளவிற்கேற்பதான் நம்முடைய ஆசீர்வாதத்தின் அளவும் இருக்கும். எனவே, நாம் தேவனிடத்தில் எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணவேண்டும் என்று கேட்கவேண்டும்.


## III அருமையான தேவன் – நாம் ஆராதிக்கும்படி

நாம் ஆராதிக்கும் ஜீவனுள்ள தேவன் எவ்வளவு அருமையானவர் என்பதை அநேக வேளைகளில் நாம் மறந்து போகிறோம். தேவன் நம்முடைய வாழ்க்கையில் செய்த எல்லா நன்மைகளையும் எண்ணிப் பார்த்தால் நாம் அவரை எப்போதுமே துதிக்கத் தூண்டும், ஆனால், நாம் அவைகளை எண்ணிப்பார்ப்பதில்லை. தேவன் ஒரு நன்மையை செய்யும்போது அந்த நேரத்தில் மாத்திரம் அதற்காக தேவனுக்கு ஒப்புக்கு ஒரு நன்றி சொல்கிறோம். பின்பு மறந்துவிடுகிறோம். தேவனுடைய அன்பின் ஆழம், உயரம், நீளம், அகலம் அவர் நமக்காக தம்முடைய ஒரே பேறான குமாரனை அனுப்பினதால் விளங்குகிறது. இதில் தேவனுடைய அன்பு விளங்குகிறது (யோவான் 3:16) அவருடைய இரக்கம் விளங்குகிறது (எபேசியர் 2:4), அவருடைய கிருபை விளங்குகிறது (எபேசியர் 2:8). இப்படிப்பட்ட அருமையான தேவனை நாம் கொண்டிருப்பது மாபெரும் பாக்கியமாகும்.

**BENNY MARTIN**

சிறுவர் பகுதி

# யானையின் தும்பிக்கை




எனதருமை சிறுதம்பி, தங்கைகளே! உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள். தொடர்ந்து இம்மாதமும் உங்களோடு கூட தேவனுடைய காரியங்களை கற்றுக் கொள்வதில் மகிழ்ச்சியடை கிறேன். இந்த சிறுவர் பகுதி மூலமாக நீங்கள் தெரிந்து கொள்ளும் காரியங்கள் உபயோகமாகவே இருக்கும் என நம்புகிறேன்.

சரி, இந்த மாதம் யானையின் தும்பிக்கை குறித்த சில காரியங்களை கற்றுக்கொள்ளப்போகிறோம். கற்றுக்கொள்வோமா? சிருஷ்டிப்பின் ஒவ்வொரு பகுதிகளும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதையே நமக்கு வெளிப்படுத்துகிறது. நீங்கள் எப்போதாவது தும்பிக்கைக்கிட்டே நின்று பார்த்ததுண்டா? சரி, அதுவெறும் நீளமான மூக்குமட்டுமல்ல. நாம் எதற்காக கைகளையும், கால்களையும், மூக்கையும் உபயோகிக்கிறோமோ அதைப் போல யானைகளும் தும்பிக்கையின் மூலம் சுவாசிப்பதற்கும், நுகர்வதற்கும், தொடுவதற்கும், பொருட்களை சுமப்பதற்கும், எதிரிகளிடமிருந்து தப்பிக் கொள்வதற்கும், குடிப்பதற்கும், சாப்பிடுவதற்கும் பயன்படுத்துகிறது.

தும்பிக்கை எலும்பில்லாத வெறும் சதையினாலான ஒன்று. அது ஆறு விதமான சதைகளைக் கொண்டது. அவை 10000 பகுதிகளாக பிரிக்கப் பட்டுள்ளன. மனிதனின் முழு உடம்பில் வெறும் 639 சதை பகுதிகள் தான் உள்ளன. அவை பொதுவாக 6 அடி உயரம் வரைக்கும் இருக்கும். சுமார் 140 கிலோ எடை கொண்டது.

சில யானைகளின் தும்பிக்கையின் முனையிலே விரல் போன்ற ஒரு முளை இருக்கும். அதைக் கொண்டு சிறுபொருட்களை அது கண்டு கொள்ளும். தும்பிக்கையை கொண்டு தண்ணீர் குடித்தாலும், அது அப்படியே குடித்துவிடாது. தும்பிக்கையை கொண்டு உயர்த்தி, தும்பிக்கையில் இருக்கும் தண்ணீரை குடிக்கும். அவை குடிப்பதோடு மட்டுமில்லாமல் தண்ணீரை தங்கள் முதுகிலே தெளித்துக் கொள்ளும். இது எதற்காகத் தெரியுமா? உடம்பை சுத்தம் செய்யவும், பூச்சிகளின் தொந்திரவு இல்லாமல் இருப்பதற்கும், சூட்டை தணிப்பதற்குமே இவ்விதம் செய்யும். யானைகள் நன்றாக நீந்தும் ஆற்றல் பெற்றவை.

யானையின் உடல் பருமனை வைத்து அவை 500 கிலோ எடைகள் வரை தங்கள் தும்பிக்கையில் சுமக்கும். தும்பிக்கைகள் பலமாகவும், லாவகமாகவும் இருப்பதால் அவை பெரிய மரங்களையும் கீழே தள்ளிவிடும். சாப்பிடும் பொழுது அவை புல்லையும், இலைகளையும் பறிக்கும்.



தும்பிக்கைகளை வைத்து அவைகள் சத்தமிடும், மற்ற மிருகங்களையும், மனிதர்களையும் பயமுறுத்தும். சில சமயங்களில் சண்டைபோடும், சில நேரங்களில் நிலத்தை தும்பிக்கையினால் அடித்து அதின் கோபத்தை வெளிப்படுத்தும். ஆசியக் கண்டப் பகுதிகளில் வாழும் குட்டி யானைகள் கோபமாக இருக்கும்போது தங்கள் தும்பிக்கையை எடுத்து பெரிய யானைகளின் வாயில் வைக்குமாம். அவைகளைக் கொண்டு தங்கள் காதுகளையும், கண்களையும் சுத்தம் செய்யுமாம் எல்லாவற்றையும் மேலாக அவைகளின் மோப்ப சக்தி மிகவும் துல்லியமானது என்று அறிவியல் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

எனக்கன்பான சிறார்களே, இப்படி நமக்கு பிரமிப்பை ஏற்படுத்தும் யானையை தேவன், வார்த்தையினால் படைத்திருக்கிறார் என்றால், அவருடைய வல்லமை எப்படிப்பட்டதென்று பாருங்கள். அவர் தான் நம் தேவன், உன்னையும், என்னையும் படைத்து அவர் தான் நடத்துகிறார்.

ஆனால், யானையைக் கண்டு பயப்படும் நாம், தேவனை எண்ணி பயப்படுகிறோமா? நாம் தேவனுக்குப் பயந்து நடப்பது அவசியம். (பிர. 12:13) அப்படி நடக்கத் தயாரா? சபாஷ்!.

***R. Abel Rodger Nayagam***

# விசுவாசத்தின் அடிப்படைகள்

**பு**திய ஏற்பாட்டின் பக்கங்களில் விவரிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் சபை ஆராதனையைப் பற்றி நாம் படித்துக் கொண்டிருக்கிறோம். இதுவரை ஆதிக்கிறிஸ்தவர்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தரின் பந்தியை அனுசரித்தார்கள் என்று பார்த்திருக்கிறோம். மேலும் அவர்கள் தேவனை ஆராதிக்கக் கூடி வந்த போது கர்த்தருடைய வேலை செய்யப்படும்படியாக கர்த்தருக்கென்று காணிக்கை செலுத்தினார்கள். கொடிய தரித்திரத்திலிருந்த வர்கள் கூட தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே **மிகுந்த உதாரத்துவமாய்** கர்த்தருக்குக் கொடுத்தார்கள் என்று பார்த்தோம்.

இது கர்த்தருக்கு நாம் எப்படி காணிக்கை செலுத்த வேண்டும் என்ற கேள்வியை நமக்குள் எழுப்புகிறது.

**கர்த்தருடைய வேலைக்காக நாம் எப்போதெல்லாம் காணிக்கை செலுத்த வேண்டும்?**

1 கொரிந்தியர் 16:2ல் நாம் வாசிக்கும் போது, வாரத்தின் முதல் நாள்தோறும் நாம் கர்த்தருக்கென்று காணிக்கை செலுத்த வேண்டும். நிச்சயமாக நாம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவனை ஆராதிக்க சபையாகக் கூடும்போது கர்த்தருக்கென்று நாம் காணிக்கை செலுத்த வேண்டும். நாங்களும் இயேசு கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்கிற பெரும்பாலான மார்க்க பிரிவினை கூட்டத்தார் இந்த வசனத்தை படித்து விட்டு, நாம் கர்த்தரைப் பிரியப்படுத்த வேண்டுமென்றால் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கர்த்தருக்கென்று காணிக்கை செலுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வருகிறார்கள். ஆனால், தேவன் இதே வார்த்தைகளில் வாரத்தின் முதல் நாளில் கர்த்தரின் பந்தியில் பங்கு பெற வேண்டும் என்ற கட்டளையை வைத்திருப்பதை கணக்கில் வைத்துக் கொள்ள மறுக்கிறார்கள், அல்லது அந்த கட்டளைக்கு கீழ்ப்படிய மறுக்கிறார்கள். அதற்கு மாறாக, கர்த்தரின் பந்தியில் மாதத்திற்கு ஒரு முறை, அல்லது வருடத்திற்கு ஒருமுறை பங்கு பெறவேண்டும் என்று முடிவுக்கு வருகிறார்கள்.

தேவனுடைய வார்த்தையை ஒரே மாதிரியாக வியாக்கியானம் செய்வது இப்படித்தானா என்று நாம் ஒரு கேள்வியைக் கேட்க வேண்டும்? நீங்கள் தேவனுடைய வார்த்தையை ஒரே மாதிரியாக வியாக்கியானம் செய்வது இப்படி அல்ல என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

இதோ இன்னொரு முக்கியமான கேள்வி

எவ்விதத்தில் நாம் காணிக்கை செலுத்த வேண்டும்?

IIகொரிந்தியர் 9:7ஐ நாம் வாசிக்கும்போது, நாம் நம் மனதில் நியமித்தபடியே கொடுக்க வேண்டும் என்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கிறார். அதாவது, கர்த்தருக்கு கொடுப்பதற்கு முன்பு நம் மனதில் திட்டமிடவேண்டும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தேவனுக்கு எவ்வளவு கொடுக்கவேண்டும் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். அதாவது, ஞாயிற்றுக்கிழமையில் தேவனுக்கு கொடுப்பதற்கு காணிக்கை இருக்கத்தக்கதாக நம்முடைய வரவு செலவுகளை சரிசெய்து வைத்துக் கொள்ள வேண்டும்.

ஆனால், நாம் அநேக வேளைகளில் நம்முடைய செலவுகள் எல்லாம் போக மீதியாயிருப்பதை கர்த்தருக்குக் கொடுக்கிறோம். அதை ஏற்றுக் கொள்வதில் தேவன் பிரியப்படமாட்டார். அதற்கு மாறாக, அவருக் குரியதைக் கொடுக்க நாம் நம் மனதில் திட்டமிடவேண்டும் என்று விரும்புகிறார். அதன்பின்பு, நாம் மனதில் நியமித்ததை அல்லது அதைவிட அதிகமாகக் கொடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறோம்.

இரண்டாவது, நம்முடைய இருதயத்தில் விருப்பமில்லாமல் ஏதோ கர்த்தருக்கு கட்டாயமாகக் கொடுக்க வேண்டும் என்ற மனதுடன் கொடுத்தால் தேவன் அதில் பிரியப்படமாட்டார். அதே போல நாம் கர்த்தருக்கு கொடுக்க வேண்டுமே என்று விசனமாய்க் கொடுப்பதையும் தேவன் விரும்பமாட்டார்.

அதற்கு மாறாக, உதாரத்துவமுள்ள நம் தேவன், உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் பிரியமாயிருக்கிறார். ஆவிக்குரியப் பிரகார மாகவும், சரீரப் பிரகாரமாகவும் நம்மை அபரிதமாக ஆசீர்வதித்திருக்கிற தேவனுக்கு நாம் உதாரத்துவமாய்த் திருப்பிக் கொடுப்பது நம்முடைய மனதில் சந்தோஷத்தை உண்டு பண்ண வேண்டும்.

IIகொரிந்தியர் 8:8,9 வசனங்களை வாசியுங்கள். இந்த வசனப் பகுதியில் நாம் ஏற்கனவேப் பார்த்தபடி, தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்த லனாகிய பவுல் கர்த்தருக்குக் கொடுக்கிறக் காரியத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்கிறார். இதை மனதில் கொண்டு எட்டாம் வசனத்தில் முக்கியமான ஒரு கருத்தை கவனியுங்கள். நாம் கர்த்தருக்கென்று கொடுப்பது நம்முடைய அன்பின் உண்மைத்தன்மைக்கான பரீட்சை என்று தேவன் சொல்கிறார். வேறொரு வார்த்தையில் சொன்னால், நீங்களும், நானும் தேவனிடத்திலும், நம்முடைய சகோதரரிடத்திலும், உண்மையான அன்பு வைத்திருந்தால் நாம் உதாரத்துவமாய்க் கொடுப்போம். ஆனால், கர்த்தருக்கென்று நாம் உதாரத்துவமாய்க் கொடுக்கவில்லை யென்றால் என்ன? நாம் தேவனிடத்திலும், நம்மைச் சுற்றியுள்ளவர்களிடத்திலும் அன்பு செலுத்தவில்லை என்று பொருள்படும்.

இந்த எண்ணமானது ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நாம் கர்த்தருக்கென்று எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பதை மிக ஆழமாக சிந்திக்கத் தூண்டவேண்டும்.

பிரியமானவர்களே, நான் உங்களை ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். நீங்கள் கர்த்தருக்கென்று கொடுக்கும் காணிக்கையை அடிப்படையாக வைத்து நீங்கள் தேவனிடத்தில் எந்த அளவுக்கு அன்பு வைத்திருக்கிறீர்கள் என்று தேவன் முடிவுக்கு வந்திருக்கிறார்? உங்கள் சக கிறிஸ்தவர்களும், மற்றவர்களும் உங்கள் காணிக்கையை அடிப்படையாக வைத்து தேவனுக்கான உங்கள் அன்பைப் பற்றி என்ன முடிவுக்கு வந்திருக்கிறார்கள்?

நாம் ஒவ்வொருவரும் நம்முடைய மனதைப் பரிசோதித்துக் கொண்டு கர்த்தருக்கென்று நாம் கொடுக்கும் காணிக்கையை அதிகரிக்கத் தீர்மானிப்போம்.

மூன்றாவது, தேவனை ஆராதிக்க ஆதிக்கிறிஸ்தவர்கள் கூடி வந்த போது அவர்கள் என்ன செய்தார்கள்?.

அவர்கள் ஜெபித்தார்கள்

அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:42ஐ வாசியுங்கள். இந்த இரண்டாம் அதிகாரம், அதாவது அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் நாம் ஏற்கனவேப் படித்த பாடங்களை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள். 36 ஆம் வசனத்தில் பேதுரு இயேசுவை சிலுவையிலறைந் தவர்களை கண்டித்து உணர்த்துகிறார். 37ஆம் வசனத்தில் அந்த வல்லமையான பிரசங்கத்தால் தங்கள் இருதயங்களில் சிலர் குத்தப்பட்டார்கள். அதன் விளைவாக, அவர்கள் பேதுருவையும், சில அப்போஸ்தலர்களையும் பார்த்து நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். தெளிவாக, அவர்கள் இயேசுவை சிலுவையிலறைந்ததோடு சேர்த்து, தங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து மன்னிப்புப் பெற என்ன செய்ய வேண்டும் என்று கேட்டார்கள். 38 ஆம் வசனத்தில் பேதுரு அவர்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சொன்னார். 40-வது வசனத்தில் தேவனால் ஏவப்பட்ட அப்போஸ்தலன், மாறுபாடுள்ள அந்த சந்ததியை விட்டு விலகி உங்களை இரட்சித்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார். 41 ஆம் வசனத்தில் ஜனக்கூட்டத்தில் இருந்தவர்களில் சிலர் பேதுருவின் வார்த்தையை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றார்கள். இப்படியாக அவர்கள் தங்கள் கடந்த கால பாவங்களிலிருந்து பாவமன்னிப்பைப் பெற்றார்கள். நாற்பத்தி ஏழாம் வசனத்தின்படி கர்த்தர் அவர்களை நாம் படித்துக் கொண்டிருக்கிற ஒன்றான மெய்சபையில் சேர்த்தார்.

42 ஆம் வசனத்தில் அவர்கள் அநேக காரியங்களில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று நாம் கற்றுக்கொள்கிறோம். அவைகளுள் ஒன்று ஜெபம். தெளிவாக, இது அவர்கள் தேவனை ஆராதிக்க கூடிவந்தபோது ஜெபித்த ஜெபத்தையும் உள்ளடக்கியது.

இந்தத் தொடரில் ஜெபத்தைப்பற்றி ஒரு முழுமையான பாடம் இருப்பதாலும் இயேசுவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக் கொள்கிற எல்லா மார்க்க பிரிவினைக் கூட்டத்தாரும், தேவனை ஆராதிக்கும்போது ஜெபிக்க வேண்டும் என்பதை அங்கீகரிப்பதாலும், இந்நேரத்தில் ஜெபத்தைப் பற்றி எந்த வசனப்பகுதியையும் நாம் படிக்கப் போவதில்லை.

நான்காவது, அந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க கூடி வந்த போது கீழ்காணும் காரியங்களை செய்தார்கள்.

**அவர்கள் தேவனுடைய வார்த்தையை பிரசங்கித்தார்கள், படித்தார்கள்** அப்போஸ்தலருடைய நடபடிகள் 2:42ல் நாம் கற்றுக் கொண்டபடி ஆதிக்கிறிஸ்தவர்கள் அநேகக்காரியங்களில் உறுதியாய்த் தரித்திருக்கிறார்கள் என்பதை நாம் கவனிக்கப்போகிறோம். அதாவது அவர்கள் கிறிஸ்துவின் வார்த்தைகளாகிய அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்.

அப். 20:7யை வாசியுங்கள் இந்த வசனங்களில் தேவன் வெளிப்படுத்தி யிருக்கிற காரியங்களை ஜாக்கிரதையாகக் கவனியுங்கள். முதலாவது, சீஷர்கள், அதாவது கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல்நாளாகிய ஞாயிற்றுக் கிழமையில் கூடினார்கள். இரண்டாவது, அப்படி அவர்கள் கூடி வந்ததற்கான காரணங்களுள் ஒன்று அப்பம் பிட்கும்படியாக, நாம் முன்பு படித்தபடி அது அவர்கள் கர்த்தரின் பந்தியை அனுசரிக்கக் கூடிவந்தார்கள் என்ற உண்மையைக் குறிக்கிறது. அப்போது நிச்சயமாக அந்த கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்கும்படியாக கூடிவந்த கூடுகையாகும்.

மூன்றாவது, கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல் அந்த கிறிஸ்தவர்களுக்குப் பிரசங்கித்தான். இந்த உதாரணத்திலிருந்து, நாம் சபையாக கூடிவரும்போது, அப்போஸ்தலருடைய உபதேசத்தை நாம் படிக்க வேண்டும், அதாவது, கிறிஸ்துவின் வார்த்தைகளாகிய அப்போஸ் தலருடைய உபதேசம், புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதை நாம் படிக்க வேண்டும்.

II தீமோத்தேயு 4:1,2 வசனங்களில் நாம் வாசிக்கும்போது, இங்கே தேவன் திருவசனத்தைப் பிரசங்கிக்க வேண்டும் என்று கட்டளையிடுகிறார். அதாவது, சபையானது தேவனை ஆராதிக்கக் கூடிவரும்போது புதிய ஏற்பாட்டில் இடம் பெற்றிருக்கிற கிறிஸ்துவின் வார்த்தைகள் பிரசங்கிக்கப் படவேண்டும், படிக்கப்படவேண்டும். மனிதர்களுடைய கற்பனைகள், போதனைகள், தத்துவங்களை படிப்பது நம்முடைய குறிக்கோளாக இருக்கக்கூடாது.

இப்படிப்பட்ட மனிதர்களுடைய செய்திகள் ஒருவருடைய ஆத்துமாவையும் இரட்சிக்காது. கிறிஸ்துவின் சுவிசேஷம் மாத்திரமே இரட்சிப்பு உண்டாவதற்கு தேவ பெலனாயிருக்கிறது. (ரோமர் 1:16).

I கொரிந்தியர் 1:22-24 வசனங்களை நாம் வாசிக்கும் போது சிலுவையிலறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிப்பதே நம்முடைய செய்தியின் மையமாக இருக்க வேண்டும். அந்த சிலுவையைப் பற்றிய உபதேசம் சிலருக்குப் பைத்தியமாயிருக்கிறது. ஆனால், உண்மையுள்ள கிறிஸ்தவர்களுக்கு சிலுவையிலறையப்பட்ட இயேசு பெலனும், தேவ ஞானமுமாயிருக்கிறார்.

1தெசலோனிக்கேயர் 2:13யை வாசியுங்கள் அந்த தெசலோனிக்கப் பட்டணத்து மக்கள் பவுலிடமிருந்து எந்த செய்தியை ஏற்றுக் கொண்டார்கள்? நிச்சயமாக அவர்கள் மனுஷர் வசனமாக ஏற்றுக் கொள்ளவில்லை! ஆனால் தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டார்கள். அந்தச் செய்தியை தேவன் எப்படி விவரிக்கிறார் என்று கவனியுங்கள். அது ஒரு சிலருக்குள்ளே அது பெலனும் செய்கிறது என்று தேவன் சொல்கிறார். எப்படிப்பட்டவர்களிடத்தில் தேவனுடைய வசனம் வல்லமையாகக் கிரியைச் செய்கிறது? தேவனையும், அவருடைய நேச குமாரனையும் விசுவாசிக்கிறவர்களிடத்தில் தான்!.

அடுத்த முறை, ஆதிக்கிறிஸ்தவர்கள் தேவனை ஆராதிக்க கூடி வந்தபோது செய்த கடைசி காரியத்தை நாம் படிப்போம். அதுவரை தேவன் தம்முடைய குமாரனுடைய புதிய ஏற்பாட்டில் கட்டளையிட்டிருக்கிறபடியே நாம் தேவனை ஆராதிக்க முயற்சிப்போம்!.

**CHARLIE DIPALMA** **BENNY MARTIN**

## ஏழு வகையான ஞானஸ்நானங்கள்

1. **யோவானின் ஞானஸ்நானம் (மாற் 1:4)**
2. **பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் (அப். 2:10)**
3. **பாடுகளின் ஞானஸ்நானம் (லூக். 22:44)**
4. **அக்கினி ஞானஸ்நானம் (மத். 3:11)**
5. **மரித்தவர்களுக்கான ஞானஸ்நானம் (1கொரி 15:29)**
6. **பழைய ஏற்பாட்டுடன் சம்பந்தப்பட்ட ஞானஸ்நானம் (1கொரி 10:1,2)**
7. **பிரதான கட்டளையின் ஞானஸ்நானம் (மத். 28:18-20, அப். 2:38)**

# தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்கிறார்கள்

**கி**றிஸ்து இயேசுவின் நாமத்தினாலே உங்களுக்கு வாழ்த்துக்கள். இன்றைய கிறிஸ்தவத்தில் அநேகர் அற்புதம் தங்களுடைய வாழ்க்கையில் நடக்க வேண்டும் என்று அற்புத சுகமளிக்கும் கூட்டத்திற்குப் போய் ஆர்வத்தோடு எதிர்பார்த்துக் காத்து இருக்கிறார்கள். ஆனால், அக்கூட்டத்தில் இரண்டு அல்லது மூன்று பேர் ஏறி தேவன் தங்களை தொட்டு சுகப்படுத்தினார் என்று சாட்சி சொல்லும் போது தங்களுக்கும் அப்படிப்பட்ட அற்புத சுகம் நடக்கவில்லையென்று ஆதங்கத்தோடு அடுத்த அற்புத கூட்டத்திலாவது நடக்குமா என்று அடுத்த கூட்டத்தை நாடி ஓடுகின்றார்கள். அற்புத சுகம் என்ற அந்த கூட்டத்தில், மக்களுடைய வியாதி தீருமா அல்லது அது ஏமாற்று வேலையா என்பதை இக்கட்டுரையில் கற்றுக்கொள்வோம்.

நம்முடைய பரிசுத்த வேதாகமம் வியாதிப்பட்ட மக்களை சொஸ்தப்படுத்தும் விதத்தை இரண்டு வகையாக பிரித்து இருக்கிறது. **(1) அற்புத சுகம் (2) விசுவாச சுகம்** இதைக் குறித்து நம்முடைய வேதாகமம் என்ன சொல்கிறது என்பதை கற்றுக்கொள்வோம்.

## *அற்புத சுகம்*

இன்றைய கிறிஸ்தவ சமுதாயத்தில் அநேக இடங்களில் "அற்புத சுகமளிக்கும் கூட்டம்" என்று அறிவித்து ஜனங்களை அழைக்கிறார்கள். அற்புத சுகமளிக்கும் போதகர், தன் குடும்ப கதையைப் பெரிதாக பேசிவிட்டு கடைசியில் கிறிஸ்துவை ஒரு ஓரமாக போதித்து விட்டு பின்பு கூட்டத்தின் கடைசியில் வியாதிப்பட்ட மக்களை சுகப்படுத்துகிறேன் என்று சொல்லி ஜெபத்திலே அழுது கூப்பாடு போடுவார். இயேசு கிறிஸ்துவினிடத்தில் ஜெபித்து அவருடைய நாமத்திலே அந்த ஜெபத்தை முடிப்பார். அந்த ஜெபத்தை கேட்டு பக்தி பரவசமடைந்த கூட்டத்தில் சிலர் வந்து "சாட்சி" என்ற பெயரில் வியாதி சுகமானதாக சொல்ல அந்த போதகரின் முகத்தில் பேரின்பம் பொங்கும் இதுதான் இன்றைய "அற்புத சுகமளிக்கும் கூட்டத்தின் நிலை", இப்படிப்பட்ட போதகர்களுக்கு அற்புத சுகம் என்றாலே என்னவென்று தெரிவதில்லை.

## *அற்புத சுகம் என்றால் என்ன?*

ஒரு மனிதன் பிறவியிலிருந்து ஊனமுள்ளவனாகவோ, அங்க வீனமுள்ளவனாகவோ அல்லது தீராத நோயிலிருப்பான் என்றால், அவனை குணப்படுத்துவது என்பது எந்த ஒரு மருத்துவ உலகத்தாலும் முடியாது. அப்படிப்பட்ட மனிதனை தேவனுடைய தாசர்கள் தேவனின் உதவியோடு அவனைத் தொட்டோ அல்லது **தங்களுடைய** வாயின் வார்த்தை மூலமாகவோ **உடனே** சுகப்படுத்துவதுதான் அற்புத சுகமாகும். வேத வசனங்களை பாருங்கள்.

## *வேத வசனங்களைப் பாருங்கள்*

1) இயேசு கிறிஸ்து சொன்ன **உடனே** குஷ்டரோகம் அவனை விட்டு நீங்கிற்று (மாற். 1:42)

2) அவர் சொன்ன **உடனே** அவன் எழுந்து தன் படுக்கையை எடுத்துக் கொண்டு எல்லாருக்கும் முன்பாக பேசினான் (மாற் 2:2)

3) 38 வருஷம் வியாதியாயிருந்த மனுஷனை பார்த்து உன் படுக்கையை எடுத்துக் கொண்டு நட என்று இயேசு கிறிஸ்து சொன்ன போது அவன் **உடனே** சுகமடைந்து தன் படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து போனான். (யோவா. 5:1.9)

4) தேவாலயத்து வாசலில் பிறவியிலிருந்தே சப்பாணியாய் பிறந்து பிச்சையெடுத்து கொண்டு இருந்த மனுஷனை பேதுரு எழுந்து நட என்று சொன்ன **உடனே** அவன் எழுந்து நடந்தான் (அப். 3:1-8).

இன்னும் அநேக வேத வசனங்கள் இருக்கிறது. அற்புத சுகம் என்பது **உடனே** நடக்கும் நிகழ்ச்சியாகும். இந்த அற்புத சுகத்தின் மூலம் வியாதிபட்ட மக்கள் உடனே சுகமடைவார்கள்.

இன்னுமொரு விஷயத்தையும் நாம் கவனிக்க வேண்டும். அது என்னவென்றால், அற்புத சுகத்தை கொடுக்கும் தேவதாசர்களுக்குத்தான் விசுவாசம் வேண்டுமே தவிர அந்த அற்புத சுகத்தை பெறுகிறவர்களுக்கு விசுவாசம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி அதை (அற்புத சுகம்) பெற்றுக் கொள்ள முடியும்.

## ***சில உதாரணங்களைப் பாருங்கள்***

1) கிறிஸ்து மரித்தவர்களை உயிரோடு எழுப்பினார். மரித்தவர்களுக்கு என்ன விசுவாசம் இருந்தது?

2) பேதுருவும், யோவானும் தேவாலயத்துக்கும் போகும் போது சப்பாணியாயிருந்தவன் அவர்களிடத்தில் பிச்சைதான் கேட்டான் (தன்னை அவர்கள் சுகமாக்க வேண்டுமென்று கேட்கவில்லை) ஆனால், பேதுரு அவனை எழுந்து நடக்க வைத்தார் (அப். 3:4,5)

3) பேதுரு உயிரோடு எழுப்பிய தொற்காள், பவுல் உயிரோடு எழுப்பிய ஐத்திகு இவர்களுக்கெல்லாம் விசுவாசம் இருந்தா உயிரோடு எழுந்தார்கள்?, இல்லை, பேதுருவின் விசுவாசமும், பவுலின் விசுவாசமும் தான் (அப். 10:36-41, 20:8-12)

இப்படியாக வேத வசனம் தகுந்த ஆதாரங்களை வைத்திருக்கிறது. இந்த அற்புத சுகமெல்லாம் முதல் நூற்றாண்டு கிறிஸ்தவத்தோடு முடிவு பெற்றுவிட்டது. இந்த அற்புத சுகத்தின் நோக்கம் என்னவென்றால் முதல் நூற்றாண்டு காலத்தில் கிறிஸ்தவம் பெருக வேண்டும் என்பதும் அநேகர் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதுதான்.

## **அற்புத சுகம் அதை செய்தவர்களுக்கும், தேவனுடைய ஊழியக்காரர்களுக்கும் பயன் அளிக்கவில்லை**

1) அநேக அற்புதங்களை செய்த அப்போஸ்தலனாகிய பவுலுக்கு சரீரத்தில் தீராத பெலவீனம் இருந்தது (1கொரி 12:7,8)

2) கர்த்தருடைய ஊழியக்காரனாகிய தீமோத்தேயுவுக்கு வயிற்றில் அடிக்கடி பலவீனம் ஏற்பட்டது (1தீமோ 5:23)

3) பவுலோடு கூட இருந்த துரோப்பீமுவை வியாதிபட்டவனாக மிலேத்துவிலே விட்டு வந்தார் (II தீமோ 4:20) ஏனென்றால் அற்புத சுகம் அவர்களுக்கு பயன்படவில்லை

4) தேவனுடைய ஊழியக்காரனாகிய எப்பாப்பிரோதீத்து வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாக இருந்தான் (பிலி. 2:27)

எனவே அற்புத சுகத்தின் நோக்கம் கிறிஸ்துவை அறியாதவர்கள் அறியும் படியாகவும் பின்பு சத்திய வசனத்தை கேட்டு இரட்சிக்கப்படும் படியாகவும் தான் செய்யப்பட்டு இருக்கிறது.

## 2. *விசுவாச சுகம்*

இன்றைய நடைமுறை கிறிஸ்தவத்தில் இருக்க கூடியது "விசுவாச சுகம்" மாத்திரமே. விசுவாச சுகம் என்பது, ஒரு கிறிஸ்தவன் வியாதிபட்டு இருக்கின்றபோது அவன் தேவனிடத்தில் விசுவாசத்தோடு ஜெபிக்க வேண்டும். அத்தோடு, தன்னுடைய வியாதிக்கு தகுந்த மருத்துவரை நாட வேண்டும் அப்போது தேவன் அவனை சுகப்படுத்துவார். ஆனால், இன்றைக்கு இருக்க கூடிய அநேக கள்ள போதகர்கள் மருத்துவத்தை நாடாமல் தேவனிடத்தில் ஜெபித்தாலே தேவன் சுகம் தருவார் என்று கூறி அநேகரை மருத்துவத்தை நாடாதபடிக்கு தடை செய்கிறார்கள். இவர்களின் வார்த்தையை நம்பி மருத்துவமனைக்கு போகாமல் ஜெபித்து, ஜெபித்து தங்கள் உடல் உறுப்புகளை இழந்தவர்களும், உயிரை விட்டவர்களும் அநேகர்.

அதுமாத்திரம் அல்ல, இப்படிப்பட்ட போதகர்களை நம்பி மருத்துவத்தை நாடாமல் கணவனை இழந்தவர்களும், மனைவியை இழந்தவர்களும் அதைவிட கொடுமையாக மகனையும், மகளையும் இழந்தவர்களும் உண்டு. பிற்பாடு அவர்கள் கிறிஸ்தவத்தை மறுதலித்ததும் உண்டு. இயேசு கிறிஸ்து சொல்வதை கேளுங்கள் "பிணியாளிக்கு வைத்தியன் தேவை" (மத். 9:12) என்று உறுதியாக கூறுகிறார்.

மேலும் யாக்கோபு ஆசிரியர் கூறும் போது "ஒருவன் வியாதிப் பட்டால் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி அவனுக்காக ஜெபம் பண்ணக்கடவர்கள் அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும், கர்த்தர் அவனை எழுப்புவார் (யாக் 1:14,15) என்கிறார்.

இங்கு எண்ணெய் என்று கூறப்பட்டு இருப்பதால் அநேக போதகர்கள் தேங்காய் எண்ணெய்யை ஜெபம் பண்ணி கொடுத்து வியாதிபட்ட இடத்திலே பூசுங்கள் உங்கள் வியாதி சரியாகும் என்று கூறுகிறார்கள். ஆனால், உண்மை அதுவல்ல. இங்கு மருத்துவ குணம் நிறைந்த ஒலிவ எண்ணெயை குறிக்கிறது. எருசலேமில் அநேக வியாதிகளுக்கு இந்த ஒலிவ எண்ணெயைதான் பயன்படுத்துவார்கள்.

ஆகையால், யாக்கோபு ஆசிரியர் சொன்னதுபோல நாம் வியாதி படுகின்ற போது ஜெபத்தோடு தக்க மருத்துவத்தை நாட வேண்டும். இதைக் குறித்து மேலும் வேதாகமம் சொல்வதை கவனியுங்கள்.

1) எசேக்கியா ராஜா மரணத்துக்கேதுவான பிளவை நோயினால் பாதிக்கப்பட்டு இருந்தபோது, ஏசாயா தீர்க்கன் அத்திப்பழத்தினால் பிளவையின் மேல் பற்றுப் போட்ட போது அவன் பிழைத்தான். (1ராஜா 20:7)

2) தீமோத்தேயுவுக்கு வயிற்றில் அடிக்கடி நேரிடுகின்ற பலவீனங் களுக்காக கொஞ்ச திராட்ச ரசம் கூட்டிக் கொள் என்று பவுல் அறிவுறுத்துகிறார் (1தீமோ 5:23)

ஆகவே, கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, முதல் நூற்றாண்டு காலத்தைப் போல இன்றைக்கும் யாரும் வியாதிபட்ட மக்களை “உடனே” சொஸ்தப்படுத்துவது என்பது முடியாத காரியம். எனவே உங்களுக்கு “வியாதிகளோ” அல்லது “பெலவீனங்களோ” வருகின்றபோது “விசுவாச சுகம்” மாத்திரமே பலன் அளிக்குமே தவிர அற்புத சுகமளிக்கும் கூட்டம் அல்ல. எனவே, இன்றைய போலி அற்புதங்களை நம்பாமல், சத்திய வசனத்திற்கு உங்களை ஒப்புக் கொடுங்கள். இன்றைக்கு அற்புதம் என்று கூறக்கூடியவர்கள் தங்கள் வயிற்றுக்குதான் ஊழியம் செய்கிறார்கள் (ரோம 16:18) இவர்களை நீங்கள் நம்பாமல் சத்திய வசனத்திற்கு உங்களை ஒப்புக் கொடுத்து கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை அறிக்கை செய்து, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்று இரட்சிக்கப்படுங்கள், பரலோக பாக்கியத்திற்கு சொந்தகாரராக மாறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்.

***N. பர்னபாஸ்,*** திருப்பூர்.

## நாளும், நடப்பும்

1. சமீபத்திய மழையால் 13 ஆண்டுகளுக்குப் பிறகு நீலகிரியில் பெரும் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது.
2. வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான அருணாச்சலப்பிரதேசம் தங்களுக்குச் சொந்தம் என சீனா அரசு உரிமை கோருகிறது.
3. உள்ளாட்சி அமைப்புகளுக்கான தலைவர் மற்றும் மேயர் தேர்தல் நேரிடையாக நடத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை மீண்டும் எழுந்துள்ளது.
4. பயங்கரவாதத்தை ஒடுக்க இந்தியா - பாகிஸ்தான் கூட்டுக்குழு அமைக்க உள்ளது.
5. உயர்படிப்புக்கான நுழைவுத் தேர்வை ரத்து செய்யலாம் என அதற்கான வல்லுநர் குழு அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.
6. தோல்விகளைச் ஜீரணிக்க கற்றுக்கொண்டதாக டென்னிஸ் வீராங்கனை சானியா கூறியுள்ளார்.

# கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய் இருக்கிறார்

"திருமறை ஆசான்" வாசகர்களாகிய உங்கள் யாவருக்கும் சபையின் தலைவராயிருக்கின்ற கிறிஸ்துவின் இன்பநாமத்தில் இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். சுகமாய் இருப்பீர்களாக.

நம் செய்திக்கான வசனப்பகுதி 1கொரி 11:3. இந்த வசனப்பகுதியில் (1) புருஷனுக்கு கிறிஸ்து தலை, (2) ஸ்திரீக்கு புருஷன் தலை (3) கிறிஸ்துவுக்கு தேவன் தலையாயிருக்கிறார் என்கிற கருத்துக்களை தியானிக்க இருக்கிறோம்.

இச்செய்தியை துவங்கு முன் ஒரு உதாரணத்துடன் துவங்குவோம். போக்குவரத்து மிகுதியாய் உள்ள ஒரு நான்கு வழிச்சாலையைக் கற்பனையில் கொண்டு வாருங்கள். இப்போது அங்கு ஒரு போக்குவரத்து காவலர் அங்கே அவசியம் என்று நாம் உணருகிறோம். போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் விளக்குகள் மிக மிக அவசியம். இல்லையென்றால் விபத்துக்களும், உயிர்ச்சேதங்களும் தவிர்க்க முடியாததாகிவிடும் தலைமைத்துவம் மிகவும் அவசியம். வழிகாட்டுனர் அவசியம்.

**1. கிறிஸ்துவுக்கு தேவன் தலையாய் இருக்கிறார்.**

(மத்தேயு 28:18) கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் அதிகாரம் பெற்றவராய் இருந்தும். (யோவா 7:16) அவர் போதித்த உபதேசம் பிதாவினுடையது. (யோவா 4:34) சரியான நேரத்திற்கு சாப்பிடக் கூட நேரமில்லாமல் போதித்தார். (மத். 8:20) பூமியிலே கையளவு நிலத்தைக் கூட தனக்காக சேர்த்து வைக்கவில்லை. பகலிலோ, இரவிலோ நேரம் ஒதுக்கித் தூங்க முடியவில்லை. (லூக்கா 8:23) படகிலே அவர் நித்திரையாய் இருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக தன் சிலுவை மரணத்திற்காக ஜெபிக்கும் போது கூட, பிதாவே! இந்தக் கசப்பான பாத்திரம் உமக்குச் சித்தமானால் என்னை விட்டு நீங்கக்கடவது என்று ஜெபித்தார் (லூக். 22:42) மொத்தத்தில் கிறிஸ்துவைப் பொருத்தவரை பூமியில் பிதாவின் சித்தத்தை வெளிப்படுத்தி செய்து முடிக்க வந்த ஒரு அடிமையானார். (பிலி 2:5-8) சுருக்கமாகச் சொன்னால் கிறிஸ்துவுக்கு தலையாக, தலைவராக பிதாவாகிய தேவன் இருந்தார். பிதாவின் கட்டளைப்படி கிறிஸ்து செயல்பட்டார். கிறிஸ்துவுக்கு ஒரு தலைவர் தேவைப்பட்டார். அவர் நம் பிதாவாகிய தேவன். இன்றைக்கு போதகர்கள் பிதாவின் சித்தப்படி வாழ்ந்து போதித்தால் கிறிஸ்தவத்தின் வளர்ச்சியை அளவிட முடியாதல்லவா!

பிதாவிற்குச் செல்லப்பிள்ளையான அவருக்கே, சுயமாய் பேச, போதிக்க அனுமதி மறுக்கப்பட்டது என்றால், நம் நாட்களில் மனம் போன போக்கில் தேவனுடைய சத்தியத்தை மாற்றுபவர்களின் நிலை என்ன? திசை காட்டும் கருவியைத் தவற விட்டு விட்டு நடுக்கடலில் தத்தளிக்கும் கப்பலைப் போலாகுமே. II பேதுரு 3:16.

## 2. ஸ்திரிக்கு புருஷன் தலையாய் இருக்கின்றான் (எபேசியர் 5:23)

ஆணின் பாதுகாப்பும், உழைப்பும் பெண்ணிற்கு வேண்டும், பெண்ணின் அன்பும், அரவணைப்பும் ஆணிற்கு வேண்டும். (ஆதி. 2:18) அதற்காகவே ஆதாமிற்கு ஏற்ற துணையை உண்டாக்கினார். ஒரு சரீரத்திற்கு தலைமைச் செயலகம் "தலைதான்" "எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம்". தலையில் தான் பார்த்தல், கேட்டல், நுகர்தல், சிந்தனை, திட்டமிடுதல் எல்லாம் நடைபெறுகிறது. தலைக்கு கீழுள்ள அவயங்கள் தலை இடும் கட்டளைக்கு அடங்கி நடக்கும்படி தேவன் படைத்திருக்கிறார். ஆக, கணவர் தலை, மனைவி சரீரம். வேதாகமத்தில் ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

1 ராஜா 21:1-4 நாபோத் என்ற ஒரு சாதாரண மனிதனின் திராட்சைத் தோட்டத்தை இஸ்ரவேலின் ராஜா ஆகாப் இச்சிக்கிறான். நாபோத் பிதாக்களின் ஆஸ்தியை விற்க மறுக்கிறான். ஆகாப் ராஜா கவலை தோய்ந்த முகத்துடன் அப்பம் புசியாமல் இருக்கிறான். மனைவி யேசபேல் தன் கணவனுக்கு உதவுவதாக எண்ணி (1ராஜா 21:6-11) என்னென்ன தவறான முறைகளை கையாள்கிறாள் பாருங்கள். (1) ராஜாவின் முத்திரையை தவறாக பயன்படுத்தினாள். (ரோம 13:1) (2) தான் செய்த காரியத்தை நிரூபிக்க (1ராஜா 21:10) இரண்டு பொய் சாட்சிகளை ஏற்படுத்தினாள். (3) நாபோத் என்ற மனிதனின் குற்றமற்ற இரத்தத்தை சிந்த வைத்தாள். (நீதி. 6:16-17) இது கர்த்தர் வெறுக்கும் காரியம்.

இங்கே சம்பவித்தது என்னவென்றால்! ஆகாப் யேசபேலுக்குத் தலையாய் இருப்பதற்கு பதிலாக யேசபேல் ஆகாபிற்கு தலையாக செயல்பட்டாள். புருஷனை தன் இஷ்டப்படி ஆட்டி வைத்தாள்.

விளைவு என்ன தெரியுமா? கணவன், மனைவி இரண்டு பேருமே கர்தத்ருடைய கோபத்திற்கு ஆளாகி மிகப் பெரும் சாபத்தைப் பெற்று அழிந்து போனார்கள். (1ராஜா 21:19-24) ராஜா 9:1-10 ஆகாபின் குடும்பமே நிர்மூலமானது. 1 ராஜா 21:25- தன் மனைவியின் சொல் கேட்டு தன்னை விற்றுப் போட்ட ஆகாப் என்று வசனத்திலே பார்க்கிறேன். எனக்கு பிரியமும் வாஞ்சையுமானவர்களே இன்றும் கூட அநேக பெண்கள் கணவர்களை தங்கள் இஷ்டப்படி ஆட்டிப் படைக்க நினைக்கிறார்கள். கிராமப்புறங்களில் ஸ்திரீகள் தங்கள் வஸ்திரத்தின் ஒரு முனையில் ரூபாய் தாள்களை முடிந்து வைத்து தங்களுக்கு வேண்டும் போது பயன்படுத்துவார்கள். இக்கட்டுரையை வாசிக்கும் உங்கள் குடும்பத்தில் யார் தலைவராக இருக்கிறீர்கள்? கணவரா அல்லது மனைவியா? உங்கள் கணவர் தேவ சாயலில் சிருஷ்டிக்கப்பட்டவர். நீங்கள் அவருக்கு துணை அவ்வளவுதான். (1தீமோ 2:12) உபதேசம் பண்ணவும் புருஷன் மேல் அதிகாரம் செலுத்தவும் ஸ்திரீக்கு அனுமதி இல்லை,

பெண்கள் ஒரு சபையில் பிரசங்கிக்கிறார்கள் என்றால் அது நிச்சயம் கிறிஸ்துவின் சபையாக இருக்காது. (1கொரி 14:34-35) பெண்கள் சபையில் பேசுவது அயோக்கியமானது. ஆகாப் - யேசபேல் தேவனுடைய பிள்ளைகளுக்கு சிறந்த எச்சரிப்பு.

**3. புருஷனுக்கு கிறிஸ்து தலையாய் இருக்கிறார்.**


(அப்போஸ் 8:18-24) சமாரியா தேசத்தை தன் மாயவித்தையாலே பிரமிக்கச் செய்து கொண்டிருந்தவன் சீமோன். இவன், பிலிப்புவால் ஞானஸ்நானம் பெற்றான் என்ற செய்தி நமக்கு பிரமிப்பை தந்தாலும் அவனுடைய பழைய சுபாவங்கள் மாறவில்லை. கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப் பட்டிருந்தான். அதாவது, மாயவித்தை சீமோன், தான் ஏற்றுக்கொண்ட கிறிஸ்தவ வாழ்வின், தலைவராக, பரலோக வழிகாட்டியாக இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. அவனது விசுவாசம் உள்ளத்திலே மாற்றத்தைக் கொண்டு வரவில்லை. (IIகொரி 5:17) அந்த மனிதன் புது சிருஷ்டியாய் இல்லை. இப்படிப்பட்ட போலிக்கிறிஸ்தவர்களின் பாவத்தின் சத்தம் தேவனுடைய சமூகத்திற்கு எட்டி, அப்படிப்பட்டவர்கள் சமுதாயத் திற்கு தோலுரித்து காட்டப்படுகிறார்கள். கடந்த சில மாதங்களாக வெளி வரும் பத்திரிக்கை செய்திகளும், தொலைக்காட்சி செய்திகளும் நமக்கு உறுதி செய்கின்றன.

இனியாவது, கிறிஸ்தவன் என்று சொல்லிக் கொள்பவர்களெல்லாம் கிறிஸ்தவர்களல்ல என்பதை புரிந்து கொள்வோமாக (1யோவா 2:6) அவரைப் போல் நடந்து (பிலி 2:5) சிந்தித்து (யோவா 4:34-35) பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுபவரே கிறிஸ்தவர். அப்போஸ்தலனாகிய பவுல் (அப். 1:1-6) தமஸ்குவின் சாலையில் ஆண்டவரை சந்தித்து மனம் மாறினான். அது முதல் "ஆண்டவரே நான் என்ன செய்ய சித்தமாய் இருக்கிறீர் என்ன?" என்று தன்னை ஒப்புக் கொடுத்து நம்மை மெய் சிலிர்க்கச் செய்கிறார். பிரியமானவர்களே! (1) நீங்கள் சார்ந்துள்ள கிறிஸ்தவம் பரிசுத்த வேத வசனங்களின் அனுமதியால் ஆனதா? (2) உங்கள் குடும்பத்தில் தலைவராக இருப்பது யார்? (3) கிறிஸ்து உங்களுக்கு தலையாக இருப்பதை நீங்கள் விரும்புகிறீர்களா? சிந்திப்பீர். செயல்படுவீர்.

**S. பிச்சைமுத்து**

## ஆதியாகமத்தில் கிறிஸ்து

| | | |
|---|---|---|
| ஆதி. 3:15 | - | ஸ்திரீயின் வித்து |
| ஆதி. 4:25 | - | சேத்தின் வம்சம் |
| ஆதி. 9:27 | - | சேமின் சந்ததி |
| ஆதி. 12:3 | - | ஆபிரகாமின் சந்ததி |
| ஆதி. 21:12 | - | ஈசாக்கின் சந்ததி |
| ஆதி. 25:23 | - | யாக்கோபின் சந்ததி |
| ஆதி. 49:10 | - | யூதாவின் சந்ததி |



## HEAR THE VOICE OF TRUTH ON RADIO SRILANKA

| LANGUAGE | DAYS | TIME P.M. | ADDRESS | SPEAKER |
|---|---|---|---|---|
| HINDI | Sunday<br>Thursday | 6.45 - 7.00 a.m. | Box. 3815<br>New Delhi - 110049 | Sunny David |
| TELUGU | Monday<br>to Friday | 5.30 - 5.45 | Box. 80<br>Kakinada - 533 001 | Joshua<br>Gootam |
| TAMIL | Sunday<br>Thursday<br>Friday | 6.45 - 7.00 p.m.<br>5.45 - 6.00 p.m.<br>5.30 - 5.45 p.m. | Box. 8405<br>Bangalore-560 084 | P.R. Swamy |
| MALAYALAM | Friday | 3.45 - 4.00 p.m. | Sunny Meads Lane,<br>Behind Sanskrit<br>College,<br>Trivandrum-695 034 | P.K. Varghee |

Please write to these address for Bible Correspondence Courses, Magazines and other Christian Literatures

ALL OF THESE PROGRAMMES ARE SPONSERED BY THE CHURCH OF CHRIST

Registered News Paper RNI No. 47661/87 - New Delhi
Postal Registration No. Erode / 26 / 2006 - 2008

# அஞ்சல் வழி வேதாகமக் கல்வி

**பரிசுத்த வேதாகமத்தை முறையாகக் கற்றுக் கொள்ள விரும்புவோருக்கு**

## ஓர் இனிய செய்தி

**ஆம், மிகத் தேர்ந்த முறையில் ஒழுங்கு செய்யப்பட்ட அஞ்சல் வழி வேதாகமப் பயிற்சியில் நீங்கள் விரும்பினால் சேர்ந்து பயன்பெறலாம். இது 15 பாடங்களைக் கொண்ட**

**ஓர் இலவச பயிற்சி.**

**இப்பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும்.**

**பயிற்சியில் சேர விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி**

இயக்குனர்,
**அஞ்சல் வழி வேதாகமக் கல்வி**
த.பெ. எண் - 27, காங்கேயம் - 638 701.
தமிழ்நாடு. இந்தியா.

திருமறை ஆசான் இதழின் ஆசிரியர் திருமறை தியானம் நிகழ்ச்சியில் நற்செய்திப்பேருரை ஆற்றுகிறார்.




| | | | | |
|---|---|---|---|---|
| தமிழன் | TV | சனி | காலை | 7:15 - 7:30 |
| தமிழன் | TV | ஞாயிறு | இரவு | 9:45 - 10:00 |
| SS மியூசிக் | TV | திங்கள் | காலை | 7:00 - 7:15 |

**Printed by : K.C. Senthilkumar, at Sun Offset Printers, 50 Kovai Road, Kangayam - 638 701.**
Editor. S. Rajanayagam.
**Ph : 04257 - 222555, 224555**